விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 207 வள்ளுவர் ஆண்டு 2056 ஆனி 30 திங்கட்கிழமை (14.07.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## வடக்கு மாணவர்களின் கல்வியை வெளிநாட்டுப் பணம் சீரழிக்கின்றது

### முன்னாள் பரீட்சைகள் ஆணையாளர் ஜீவராணி புனிதா ஆதங்கம்



(கொழும்பு)

வெளிநாட்டுப் பண மோகமே வட மாகாணம் கல்வியில் பின்னடைவான நிலையில் இருப்பதற்குக் காரணம் என முன்னாள் பரீட்சைகள் ஆணையாளர் ஜீவராணி புனிதா தெரிவித்துள்ளார்.

தனியார் தொலைக்காட்சி நேர்காணல் ஒன்றில், வட

15ஆம் பக்கம் பார்க்க

ஈஸ்டர் குண்டுத் தாக்குதல்

## ராஜபக்ஷக்கள் மீது எந்த நடவடிக்கையும் இல்லை

### சிறீதரன் எம்.பி காட்டம்



(ஹற்றன்)

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தமிழ்த் தரப்புகளால் மேற்கொள்ளப்பட்டது என்பது போன்ற மாயை கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது.

ஆனால் அதற்

15ஆம் பக்கம் பார்க்க

மகளுக்காக சிறை சென்ற

## செவ்வந்தியின் தாய் சிறையில் உயிரிழப்பு

(கொழும்பு)


கணேமுல்ல சஞ்சீவ கொலை வழக்கில் தேடப்படும் முக்கிய சந்தேகநபராக பெயரிடப்பட்டுள்ள செவ்வந்தியின் தாயார் வெலிக்கடை சிறையில் உயிரிழந்துள்ளார்.

செவ்வந்தியின் குற்றச்

15ஆம் பக்கம் பார்க்க

# தமிழர் பகுதியை இந்தியா தனது மாநிலமாக்கப் போகிறது

### பிதற்றுகிறார் பேராசிரியர் தர்மரதன தேரர்



(கொழும்பு)

தமிழர் பகுதியான வடக்கு, கிழக்கு மாகாணங்களை இந்தியா தனது மாநிலமாகப் பிரகடனப்படுத்த எத்தனிக்கிறது. இதற்கான சதித்திட்டம் திரைமறைவில் இடம்பெறுகின்றது என பேராசிரியர் இந்துராகரே தர்மரதன தேரர் தெரிவித்துள்ளார். (16ஆம் பக்கம் பார்க்க)

## அன்று தேங்காய் நேற்று உப்பு இன்று வெற்றிலை

(கொழும்பு)

இலங்கையில் உப்புக்கு ஏற்பட்ட தட்டுப்பாட்டினைத் தொடர்ந்து வெற்றிலைக்கும் தட்டுப்பாடு எழுந்துள்ளது.

சந்தையில் வெற்றிலை

15ஆம் பக்கம் பார்க்க

## திருவாசக அரங்கம் திறப்பு விழா இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நாவற்குழி திருவாசக அரண்மனை வளாகத்தில் புதிதாக அமைக்கப்பட்ட திருவாசக அரங்கத்திறப்பு விழா இன்று 14ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 4 மணிக்கு இடம்பெறும்.

சிவபூமி அறக்கட்டளைத் தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில்,

02ஆம் பக்கம் பார்க்க

## முல்லையில் வாகன விபத்து

### ஒருவர் பலி: இருவர் படுகாயம்

(உடையார்கட்டு)

முல்லைத்தீவு உடையார் கட்டுப் பகுதியில் நேற்று மாலை இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் உயிரி

15ஆம் பக்கம் பார்க்க

எல்லை நிர்ணயப் பிரச்சினைகளுக்கு

## தீர்வு கண்ட பின்னரே மாகாண சபைத் தேர்தல்

(கொழும்பு)


எல்லை நிர்ணயம் தொடர்பில் தீர்வு கண்டதன் பின்னரே மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படும் என மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள், பொது நிர்வாக அமைச்சர் சந்தன அபேரத்ன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, உள்ளூராட்சி மன்ற

15ஆம் பக்கம் பார்க்க

## சர்வதேச விசாரணையால் மட்டுமே செம்மணி 'உண்மை' வெளிவர முடியும்

### கஜேந்திரகுமார் திட்டவட்டம்



(யாழ்ப்பாணம்)

செம்மணி மனிதப் புதைகுழிப் பேரவலம் உள்ளடங்கலாகத் தமிழர்களுக்கு எதிரான யுத்தத்துக்கும் இனவழிப்புக்கும் அப்போது ஆட்சியிலிருந்த அரசாங்கங்களுக்கு மக்கள் விடுதலை முன்னணி ஆதரவு வழங்கியதாகவும் அப்போதைய இனவழிப்பின் பங்காளியாகத்

02ஆம் பக்கம் பார்க்க

## ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் குறித்து பிள்ளையான் எதுவும் கூறவில்லை

### அமைச்சர் விஜேபால பொய்கூறுகிறார் சன்னதம் கொள்கிறார் உதய கம்மன்பில



(கொழும்பு)

இராணுவத்தினரே குண்டுத் தாக்குலை நடத்தினர் என்று பிள்ளையானின் வாய்மூல சாட்சியத்தைப் பெறவே இந்த அரசாங்கம் முயற்சிக்கிறது. அசாத் மௌலானாவை அரச தரப்பு சாட்சியாக மாற்றிக் கொண்டு

02ஆம் பக்கம் பார்க்க

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஈஸ்டர் ...

குண்டுத்தாக்குதலை இராணுவத்தின் மீது சுமத்தவே அரசதரப்பு எதிர்பார்க்கிறது.

குண்டுத்தாக்குதல்கள் பற்றி பிள்ளையான் ஏதும் குறிப்பிடவில்லை. அமைச்சர் ஆனந்த விஜேபால குறிப்பிடுவது முற்றிலும் பொய்யானது எனப் பிவிதுறு ஹெல உறுமய கட்சியின் தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.

தமிழ்ப் பிரிவினைவாதிகளின் நிதியை இந்த அரசாங்கம் பெற்றுக்கொண்டுள்ளது. தமிழ்ப் பிரிவினைவாதிகளை மகிழ்விப்பதற்கு விடுதலைப் புலிகளில் இருந்து விலகி இராணுவத்துக்கு ஒத்துழைப்பு வழங்கிய பிள்ளையானைப் பலிகொடுக்க அரசாங்கம் முயற்சிக்கிறது. நன்றிக்கடன் நிமித்தமே பிள்ளையானுக்காக நான் முன்னிலையாகியுள்ளேன்.

உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதலை பிள்ளையான் சிறையில் இருந்தவாறே முன்கூட்டியதாகவே அறிந்துள்ளதாகப் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால கடந்த புதன்கிழமை பாராளுமன்றத்தில் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற விவகாரங்கள் அமைச்சர் ஆனந்த விஜேபால 2025.04.10 ஆம் திகதியன்று பாராளுமன்றத்தில் உரையாற்றுகையில், தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள பிள்ளையான் உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல்கள் தொடர்பில் சர்ச்சைக்குரிய பல விடயங்களை விசாரணையின் போது குறிப்பிட்டுள்ளதாகத் தெரிவித்தார். இதனை நம்பி ஜனாதிபதியும் ஏப்ரல் 21 ஆம் திகதிக்கு முன்னர் உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல்களின் பிரதான சூத்திரதாரியை நாட்டு மக்களுக்குப் பகிரங்கப்படுத்துவதாகக் குறிப்பிட்டார்.

பிள்ளையானை நான் சிறையில் சென்று சந்தித்தேன். குண்டுத்தாக்குதல்கள் தொடர்பில் பிள்ளையானிடம் விசாரணை அதிகாரிகள் ஏதும் கேட்கவுமில்லை, அவரும் ஏதும் குறிப்பிடவுமில்லை.

ஆகவே அமைச்சர் ஆனந்த விஜேபால பொய்யுரைத்தார் என்பதை ஊடகங்களுக்குக் குறிப்பிட்டேன். உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல்கள் சம்பவத்துக்காக பிள்ளையான் கைது செய்யப்பட்டதாகக் குறிப்பிடுவது பொய், அவ்வாறு குறிப்பிடுபவர்களுக்கு பைத்தியம். கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தரைக் கடத்தி, காணாமலாக்கிய சம்பவத்துக்காகவே பிள்ளையான் கைது செய்யப்பட்டுள்ளார் என்று அமைச்சர் சுனில் ஹந்துனெத்தி குறிப்பிட்டிருந்தார். ஆகவே சுனில் ஹந்துனெத்தி பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபாலவுக்கும் ஜனாதிபதிக்கும் பதிலளித்துள்ளார்.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால அண்மையில் பாராளுமன்றத்தில் பிள்ளையான் பற்றி குறிப்பிட்டது முற்றிலும் பொய்யானது. பிள்ளையான் கைது செய்யப்பட்டமைக்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் இரண்டு அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. அத்துடன் பிள்ளையான் தமிழ் மொழியில் வழங்கிய வாக்குமூலத்தின் பிரதியை பொலிஸார் நீதிமன்றத்துக்கு சமர்ப்பித்துள்ளனர்.

தமிழ் மொழிமூல வாக்குமூலம் ஆங்கில மொழிக்கு மொழிபெயர்க்கப்பட்டு எனக்குக் கிடைக்கப் பெற்றுள்ளது. அந்த வாக்குமூலத்தில் எவ்விடத்திலும் குண்டுத்தாக்குதல்கள் பற்றி குறிப்பிடப்படவில்லை. உபவேந்தர் காணாமலாக்கப்பட்ட சம்பவம் பற்றியே கேள்வியெழுப்பப்பட்டுள்ளது என்றார். (ந-7)

## சர்வதேச...

திகழ்ந்த தற்போதைய அரசாங்கத்திடம் நீதியை எதிர்பார்க்கமுடியாது எனவும் சுட்டிக்காட்டிய தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், சர்வதேச விசாரணையின் ஊடாக மாத்திரமே செம்மணி விவகாரத்தில் உண்மையையும் நீதியையும் நிலைநாட்டமுடியும் எனத் தெரிவித்தார்.

செம்மணி சித்துப்பாத்தியில் கண்டறியப்பட்ட மனிதப்புதைகுழி அகழ்வு மற்றும் விசாரணைகள் சர்வதேச நியமங்களுக்கு அமைவாக சர்வதேச தடயவியல் நிபுணர்களின் கண்காணிப்புடன் முன்னெடுக்கப்படவேண்டும் என வலியுறுத்தப்படுவரும் பின்னணியிலேயே கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மேற்கண்டவாறு சுட்டிக்காட்டினார்.

செம்மணி மனிதப்புதைகுழி என்பது சாதாரணமானதொரு விடயமல்ல. அது ஏற்கனவே சர்ச்சைக்குரிய பேசு பொருளாக இருந்த ஒரு விடயமாகும். கிருஷாந்தி குமாரசுவாமியின் படுகொலை தொடர்பான விசாரணைகளை அடுத்து 1999 ஆம் ஆண்டு செம்மணியில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வுகளின்போது 15 எலும்புக்கூடுகள் கண்டறியப்பட்டன. அதன் பின்னர் சர்ச்சைக்குரிய அந்த மனிதப்புதைகுழி விவகாரம் தொடர் விசாரணைகளின்றி இடைநடுவே முடக்கப்பட்டது.

இந்நிலையில் தற்போதும்கூட செம்மணி சித்துப்பாத்தி இந்து மயானத்தின் புனரமைப்புப்பணிகளின்போது தற்செயலாகத்தான் இந்த மனிதப் புதைகுழி கண்டறியப்பட்டிருக்கிறது. எனவே இவ்விவகாரம் தொடர்பில் அரசாங்கம் ஒருபோதும் நியாயமான விசாரணைகளை முன்னெடுக்கப் போவதில்லை.

அதேவேளை உயிர்த்த ஞாயிறு தினப் பயங்கரவாதத்தாக்குதல் சம்பவத்தைப் பொறுத்தமட்டில், அவ்வேளையில் ஆட்சிப்பீடத்தில் இருந்த மற்றும் அதனைத்தொடர்ந்து ஆட்சிப்பீடமேறிய தரப்பினர் மக்கள் விடுதலை முன்னணிக்கு எதிரான தரப்பினர் என்பதனால், அதுகுறித்த உண்மைகளை வெளிக்கொணரவேண்டிய தேவை தற்போதைய தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்கு உண்டு என்று சுட்டிக்காட்டிய கஜேந்திரகுமார்,

இருப்பினும் தமிழர்களுக்கு எதிரான யுத்தத்தையும், இனவழிப்பையும் அப்போதைய அரசாங்கங்களுடன் இணைந்து ஊக்குவித்த மக்கள் விடுதலை முன்னணி, அக்காலப் பகுதியில் உருவான செம்மணி போன்ற மனிதப்புதைகுழிகள் தொடர்பில் எவ்வாறு நீதியான விசாரணைகளை முன்னெடுக்கும்? எனக் கேள்வி எழுப்பினார்.

ஆகவே செம்மணி விவகாரத்தைப் பொறுத்தமட்டில், சர்வதேசத்தின் தலையீடோ அல்லது சுயாதீன சர்வதேச விசாரணையோ இன்றி, அது குறித்த உண்மை மற்றும் நீதியை உறுதிப்படுத்தவே முடியாது என்று தெரிவித்தார். (ந-7)

## திருவாசக ...

வைத்திய நிபுணர் வை.மனோமோகன் சிவகௌரி தம்பதிகள் (அவுஸ்திரேலியா) பிரதம விருந்தினராகவும் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் சிறப்பு விருந்தினராகவும் யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் சி.சிறிசற்குணராஜா கௌரவ விருந்தினராகவும் கலந்து கொள்வர்.

நிகழ்வில் சிவஸ்ரீ சபா.வாசுதேவக் குருக்கள், ஸ்ரீ வேத வித்தியாசாகர் சுவாமிகள் ஆசியுரை வழங்குவர்.

சிவபூமி அறக்கட்டளையின் உபதலைவர் வைத்திய நிபுணர் த.பேரானந்தராஜா வரவேற்புரையை நிகழ்த்த, வாழ்நாள் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை, பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா ஆகியோர் வாழ்த்துரை வழங்க, வலம்புரிப் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் ந.விஜயசுந்தரம் சிறப்புரையாற்றுவார்.

இந்நிகழ்வில் சிறப்பு மலர் வெளியீடு இடம்பெறுவதுடன் மலர் அறிமுக உரையை பொறியியலாளர் ச.சந்தோஷ் ஆற்றுவார்.

தொடர்ந்து இசை அர்ப்பணம் மற்றும் பொன்னாலை சந்திரபரத கலாலய மாணவர்கள் வழங்கும் திருமுறை நடன அர்ப்பணம் என்பனவும் இடம்பெறும். (ந)


# மரண அறிவித்தல்

அன்னை மடியில் 15 - 12 - 1945



ஆண்டவன் அடியில் 12 - 07 - 2025

## திருமதி. பூபதி பொன்னம்பலம்

கரணவாய் தெற்கு, கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி.பூபதி பொன்னம்பலம் அவர்கள் கடந்த சனிக்கிழமை (12.07.2025) சிவபதமடைந்தார். அன்னார் காலஞ்சென்ற சின்னையா - தங்கம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற மயில்வாகனம் - தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற பொன்னம்பலத்தின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்ற மகேஸ்வரி சிதம்பரப்பிள்ளை அவர்களின் பாசமிகு சகோதரியும், மயூரன் (பொறியியலாளர் - லண்டன்), பரந்தாமன் (லண்டன்), பார்த்திபன் (ஆசிரியர்- யாழ்.கரணவாய் தாமோதர வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், பாலசுதர்சினி (லண்டன்), கீதா (லண்டன்), துஷ்யந்தினி (அபிவிருத்தி உத்தியோகத்தர் - கரவெட்டிப் பிரதேச செயலகம்) ஆகியோரின் அன்பு மாமியும், விதுஷ் (லண்டன்), ஹரிஸ் (லண்டன்), காவ்யன் (லண்டன்), சுவாஹதா (லண்டன்), சுபாங்கன், தார்மீகா ஆகியோரின் செல்லப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று திங்கட்கிழமை (14.07.2025) முற்பகல் 10 மணியளவில் கரணவாய் தெற்கில் அமைந்துள்ள அமரரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் கரணவாய் தெற்குப் பூவரசம் திட்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டுத் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

மாணிக்கவளவு,
கரணவாய் தெற்கு,
கரவெட்டி.

தகவல்:
குடும்பத்தினர்
077 049 8112

(C-3410)



## வலி கிழக்கு தென்பகுதி ப.நோ.கூ.சங்கம், நீர்வேலி

# கூறுவிலை கோரல்

வலி கிழக்கு தென்பகுதி பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் உரும்பிராய் கிராமியவங்கி திருத்தம் செய்வதற்கான கூலி, மூலப்பொருட்களிற்கான கூறு விலைகள் கோரப்படுகின்றன. கூறுவிலைப் படிவங்களை சங்க தலைமையகத்தில் பெற்று பூரணப்படுத்தி "பொது முகாமையாளர், வலி கிழக்கு தென்பகுதி பல நோக்கு கூட்டுறவுச் சங்கம், நீர்வேலி" எனும் முகவரிக்கு தபால் மூலமோ அன்றேல் நேரிலோ அனுப்பி வைக்கவும்.

விண்ணப்ப முடிவுத் திகதி : 28.07.2025
நண்பகல் 12.00 மணி

விண்ணப்பப்படிவக் கட்டணம் : ரூபா.1000.00

மீளளிக்கக்கூடிய வைப்புப்பணம் : ரூபா.10000.00

நீர்வேலி
14.07.2025

(C-3406)

பொது முகாமையாளர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலச்சந்திரன்-இசைப்பிரியா படுகொலை

## நீதிமன்றத்தை நாடவுள்ள சிங்கள சட்டத்தரணி

(கொழும்பு)

இலங்கையின் இறுதி யுத்தத்தின் போது சர்வதேச மனிதாபிமானச் சட்டம் கடுமையாக மீறப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகத்துக்கு அளிக்கப்பட்ட முறைப் பாடு தொடர்பில், நீதிமன்றத்தை நாடவுள்ளதாக முறைப்பாட்டாளரான சட்டத்தரணி தனுக ரணஞ்சக கஹந்தகமகே தெரிவித்துள்ளார்.

தமது முறைப்பாடு குறித்து, பொலிஸார் இதுவரையில் உரிய பதில் வழங்காமையினால், மேன்முறையீட்டு நீதிமன்றத்தை நாடி, நீதிப் பேராணை மனுவொன்றைத் தாக்கல் செய்யவுள்ளதாக முறைப்பாட்டாளர் தென்னிலங்கை ஊடகம் ஒன்றுக்கு தெரிவித்துள்ளார்.

அதற்கமைய, எதிர்வரும் வாரத்தை மாத்திரம் பொலிஸாருக்கான கால அவகாசமாக வழங்கவுள்ளதாகவும், அதற்குள் பதில் கிடைக்காவிடின் நீதிமன்றத்தை நாடவுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

தனுக ரணஞ்சக கஹந்தகமகே என்ற சட்டத்தரணியினால், கடந்த ஜூன் மாதம் 13 ஆம் திகதி இசைப்பிரியா மற்றும் பாலச்சந்திரனின் மரணம் தொடர்பான முறைப்பாடு, பதில் பொலிஸ்மா அதிபரிடம் சமர்ப்பிக்கப்பட்டது.

மேலதிக நடவடிக்கைகளுக்காக, குறித்த முறைப்பாடு சட்டப்பிரிவுக்குப் பொறுப்பான பிரதி பொலிஸ்மா அதிபரிடம் ஒப்படைக்கப்பட்டதாக ஏற்கனவே, சட்டத்தரணிக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இறுதிப்போரின் போது, சரணடைந்தவர்கள், சட்டவிரோதமாகக் கொல்லப்பட்டுள்ளதாகக் குறித்த முறைப்பாட்டில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இதில், பிரதானமாக, இசைப்பிரியா எனப்படும் ஷோபா மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் மகன் பாலச்சந்திரன் ஆகியோர் கொல்லப்பட்ட சம்பவங்கள் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த இசைப்பிரியா 2009 ஆம் ஆண்டு மே மாதம் உயிருடன், நிராயுதபாணியாக, காவலில் இருந்ததாகவும், பின்னர் சந்தேகத்திற்கிடமான நிலையில் இறந்து கிடந்ததாகவும் காணொளி ஆதாரங்கள் காட்டுவதாகக் குறித்த முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தக் காட்சிகளின் அடிப்படையில், அவர் பாலியல் வன்புணர்வு மற்றும் மரண தண்டனை பாணியில் கொலை செய்யப்பட்டார் என்பதற்கான தடயங்களைக் காணமுடிகிறது.

அதேநேரம், 12 வயதுடைய பாலச்சந்திரன், உயிருடன் ஆயுதமேந்திய படையினர் வசமிருந்தமையும், பின்னர் அவர் மார்பில் துப்பாக்கிச்சூட்டுக் காயங்களுடன் உயிரிழந்து காணப்படுவதையும் காட்டும் புகைப்படங்கள் உள்ளன.

இதுபோன்ற செயல்கள் நிரூபிக்கப்பட்டால், சர்வதேசச் சட்டத்தின் கீழ், அவை போர்க் குற்றங்களாகக் கருதப்படும் எனவும், ஜெனீவா உடன்படிக்கைகள் மற்றும் ரோம் சாசனம் ஆகிய இரண்டையும் மீறுவதாக உள்ளதாகவும் முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்நிலையில், இலங்கை பொலிஸார் இந்தச் சம்பவம் குறித்து, உண்மை மற்றும் பொறுப்புடன், நியாயத்துக்கு வழிவகுக்கும் வகையில் விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் என்று முறைப்பாட்டாளரான, சட்டத்தரணி தனுக ரணஞ்சக கஹந்தகமகே கோரியுள்ளார். (நி)

# தேங்காய் விலை உயரும் சாத்தியம்

(கொழும்பு)

நாட்டில் மீண்டும் தேங்காய் விலை உயர்வடையும் சாத்தியம் காணப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் விலங்குகளால் தேங்காய் அறுவடை சேதமடைந்ததால், சந்தையில் தேங்காய் பற்றாக்குறை ஏற்பட்டது. இதனால் தேங்காய் உற்பத்தி பொருட்களின் விலையும் அதிகரித்தன.

கடந்த சில மாதங்களாக 220 ரூபாவுக்கு விற்கப்பட்ட தேங்காய் சில தினங்களுக்கு முன்னர் சந்தையில் 100 முதல் 170 ரூபா வரை பல்வேறு விலைகளில் விற்பனை செய்யப்பட்டது.

சில வியாபாரிகள் அதிக இலாபத்துடன் தேங்காய்களை விற்பனை செய்வதாகவும், அப்போது தேங்காய் விற்பனை குறைந்ததால் வருமான நிலையும் குறைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இவ்வாறான நிலையில் சந்தையில் மீண்டும் தேங்காயின் விலை அதிகரிக்கும் சாத்தியம் காணப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, நாட்டில் வருடம் தோறும் மேற்கொள்ளப்படும் தேங்காய் அறுவடையின் அளவு எதிர்பார்த்ததை விடவும் இவ்வருடம் குறைந்துள்ளதாக தென்னை வேளாண்மை சபை தலைவர் சுனிமல் ஜெயக்கொடி தெரிவித்துள்ளார்.

இவ்வருடம் தேங்காய் அறுவடை மூலம் 3,000 மில்லியன் தேங்காய்கள் எதிர்பார்க்கப்பட்ட நிலையில், அதில் 246 மில்லியன் தேங்காய்கள் குறைந்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

தென்னை இருவார விழா குறித்த ஊடக சந்திப்பில் பங்கேற்ற சுனிமல் ஜெயக்கொடி, எந்த காரணத்திற்காகவும் தென்னை மரங்களை வெட்டுவது சட்டப்படி தடைசெய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். (நி)

# மாவட்ட நீதிமன்றம், மன்னார்.

## அறிவித்தல்

**வழக்கு இலக்கம் D 853/24**
**தன்மை: மணநீக்கம்**

**திசாகர சர்மா அம்பிகாவதி,**
சாலமன் குளம்,
வட்டக்கண்டல், மன்னார்.
**- வழக்காளி**

எதிர்

**இராசையா திசாகர சர்மா,**
C/O. வாமதேவ குருக்கள்,
நயினாதீவு,
நாகபூசனி அம்மன் ஆலயம்,
யாழ்ப்பாணம்.
**- எதிராளி**

மேற்பெயர் குறிப்பிட்ட எதிராளிக்கு

மேற்படி வழக்கின் வழக்காளி பிராதின்படி இராசையா திசாகர சர்மா ஆகிய உமக்கு எதிராக விவாகரத்து வழக்கொன்றை மன்னார் மாவட்ட நீதிமன்றில் தொடர்ந்துள்ளார். குறித்த வழக்கானது 2025 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 29 ஆம் திகதிக்கு தவணையிடப்பட்டுள்ளது. குறித்த தினத்தில் காலை 9.00 மணிக்கு இந் நீதிமன்றில் இராசையா திசாகர சர்மா ஆகிய நீரோ அல்லது தங்களது பதிவுபெற்ற சட்டத்தரணியோ தோன்றி உமது மறுமொழி ஏதேனும் இருப்பின் அதனைக் கோப்பிடுமாறு தேவைப்படுத்தப்படுவதோடு சொல்லப்பட்ட திகதியன்று அல்லது அதன் முன்னர் நீவிர் மறுமொழி கோப்பிடத் தவறும் பட்சத்தில் வழக்கானது மறு கட்சிக்காரர் இல்லாமல் மேற்கொண்டு நடாத்தப்பட்டு விளங்கப்படும் என அறிந்து கொள்ளுமாறு இத்தால் தேவைப்படுகின்றீர்.

**மன்றின் கட்டளைப்படி**

2025ம் ஆண்டு ஜூலை மாதம் 14 ம் திகதி

ஒப்பமிடப்பட்டுள்ளது

பதிவாளர்

ஆங்கிலத்தில் பதவி இலச்சினையிடப்பட்டுள்ளது.

(479)

# இந்தியாவுக்கு விதிக்கப்படும் வரியும் இலங்கையில் தாக்கத்தை ஏற்படுத்தும்

## எச்சரிக்கும் எதிர்க்கட்சி

(கொழும்பு)



இந்தியாவுக்கு விதிக்கப்படும் வரியும் எமக்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் தாக்கத்தை ஏற்படுத்தும். இந்த விவகாரத்தில் அரசாங்கத்தின் அசமந்த போக்கினால் முழு நாடும் பாரிய பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்ள வேண்டிய அபாயம் ஏற்பட்டுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் அஜித் பி பெரேரா தெரிவித்தார்.

ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில், ஆசியாவில் இலங்கை மாத்திரமே அமெரிக்காவுடன் தீர்வை வரி தொடர்பில் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டுள்ளதாக பிரதி அமைச்சர் அனில் ஜயந்த தெரிவித்திருந்தார்.

அது மாத்திரமின்றி இரு நாடுகளும் இணைந்து கூட்டு அறிக்கையொன்றை வெளியிடவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

15 சதவீத வரி குறைப்பை பெற்றுக் கொண்டு ஆடை தொழிற்துறையை பாதுகாக்க முடியும் என்றும் உறுதியளித்தனர். ஆனால் இவை அனைத்தும் பொய் என்பதை நிரூபிக்கும் வகையில் அமெரிக்காவினால் இலங்கைக்கு 30 சதவீத வரி விதிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான நிலைமை இலங்கையின் ஆடை உள்ளிட்ட ஏற்றுமதிகளுக்கான கேள்வி வீழ்ச்சியடையச் செய்யும்.

44 சதவீதத்திலிருந்து 30 சதவீதமாக வரி குறைக்கப்பட்டுள்ள போதிலும், பிலிப்பைன்ஸ், வியட்நாம் போன்ற நாடுகள் எம்மை விட குறைவான வரி வீதத்தைப் பெற்றுக் கொண்டுள்ளமையால் அது அமெரிக்க ஏற்றுமதி சந்தையில் எமக்கு பாரிய சவாலாக அமையும்.

இவற்றுக்கு மத்தியில் இந்தியாவின் நிலவரம் என்ன என்பது இன்னும் வெளிப்படுத்தப்படவில்லை. இந்தியாவுக்கு எந்தளவு வரி அறிவிக்கப்படவுள்ளது என்பதை எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றோம்.

இந்தியாவுக்கு விதிக்கப்படும் வரியும் எமக்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் தாக்கத்தை ஏற்படுத்தும் என அவர் தெரிவித்தார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மாகாண மட்ட நீச்சல் போட்டியில் யாழ்.மாவட்ட அணி சம்பியன்



வடமாகாண விளையாட்டு திணைக்களத்தினால் நடத்தப்பட்ட மாகாண மட்ட நீச்சல் போட்டி யாழ் மாவட்ட ஆண்கள்,பெண்கள் அணியினர் 62 பதக்கங்களை கைப்பற்றி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டனர்.

வடமாகாண மாவட்டங்களுக்கு இடையிலான ஆண்கள், பெண்களுக்கான நீச்சல் போட்டி கிளிநொச்சி நீச்சல் தடாகத்தில் நடைபெற்றது.

இதில் ஆண்களுக்கான போட்டியில் யாழ் மாவட்ட அணியினர் 17 தங்கப் பதக்கங்கள், 10 வெள்ளிப் பதக்கங்கள், 8 வெண்கல பதக்கங்கள் உட்பட 35 பதக்கங்களை கைப்பற்றி முதலாம் இடத்தையும், கிளிநொச்சி மாவட்ட அணியினர் 7 வெள்ளி பதக்கங்கள் 7 வெண்கல பதக்கங்கள் உட்பட 14 பதக்கங்களை கைப்பற்றி இரண்டாம் இடத்தையும், வவுனியா மாவட்ட அணியினர் 2 வெண்கல பதக்கங்களை கைப்பற்றி மூன்றாம் இடத்தை பெற்றனர்.

பெண்களுக்கான போட்டியில் யாழ் மாவட்ட அணியினர் 14 தங்கப் பதக்கங்கள், 7 வெள்ளி பதக்கங்கள், 6 வெண்கல பதக்கங்கள் உட்பட 27 பதக்கங்களை கைப்பற்றி முதலாம் இடத்தினையும் கிளிநொச்சி மாவட்டம் 2 தங்கப் பதக்கங்கள் 6 வெள்ளி பதக்கங்கள், 5 வெண்கல பதக்கங்கள் உட்பட 13 பதக்கங்களை கைப்பற்றி இரண்டாம் இடத்தினையும், வவுனியா மாவட்ட அணியினர் 2 வெள்ளி பதக்கங்கள் 4 வெண்கல பதக்கங்கள் உட்பட 6 பதக்கங்களை கைப்பற்றி மூன்றாம் இடத்தினையும் பெற்றுக் கொண்டனர். (3-90)



வட மாகாண கல்வித் திணைக்களத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட மாகாண பாடசாலைகளுக்கிடையிலான 20 வயதுக்குட்பட்ட மற்றும் 17 வயதுக்குட்பட்ட டென்னிஸ் போட்டிகளில் யாழ்ப்பாணம் புனித பரியோவான் கல்லூரி அணியினர் வெற்றியீட்டி சம்பியனைக் கைப்பற்றியுள்ளனர்.

# கபில்தேவ் சாதனையை முறியடித்து புதிய சாதனை படைத்த பும்ரா




இந்தியா- இங்கிலாந்து இடையிலான 3ஆவது டெஸ்ட் லண்டனில் நடைபெற்று வருகிறது. நாணயச் சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து, 387 ஓட்டங்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தது.

இதில் ஜோ ரூட் சதம் அடித்தார் (104). ஜேமி ஸ்மித் மற்றும் கார்ஸ் அரை சதமடித்தனர்.

இந்தியப் பந்து வீச்சில் ஜஸ்பிரித் பும்ரா அதிரடி காட்டினார். 5 விக்கெட்டுகளை வீழ்த்திய அவர், வெளிநாட்டு டெஸ்ட்களில் 13 ஆவது முறையாக 5 விக்கெட்டுகள் வீழ்த்தும் சாதனையை நிகழ்த்தியுள்ளார்.

இதன்மூலம், இந்தியா சார்பில் வெளிநாட்டு டெஸ்ட் போட்டிகளில் அதிக முறை 5 விக்கெட்டுகள் எடுத்த வீரராக இடம்பிடித்துள்ளார்.

முன்னைய சாதனையாளர்களான கபில் தேவ், அனில் கும்ப்ளே, ஜஹீர் கான் ஆகியோரை பின்னுக்கு தள்ளி பும்ரா இந்தச் சாதனையை படைத்துள்ளார். முன்னதாக கபில் தேவ் 12 முறை 5 விக்கெட்டுகள் கைப்பற்றி இருந்ததே சாதனையாக இருந்தது.

தற்போது கபில்தேவின் அந்த வாழ்நாள் சாதனையை பும்ரா முறியடித்துள்ளார். (3)

## மாகாணமட்ட கிரிக்கெட் தொடர்

# முதல் தடவையாக சம்பியனைக் கைப்பற்றியது கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி






வடக்கு மாகாண பாடசாலைகளுக்கிடையிலான பெண்களுக்கான கிரிக்கெட் போட்டியில் யாழ்ப்பாணம் கரவெட்டி விக்னேஸ்வரா கல்லூரி அணி சம்பியன் பட்டத்தை வென்றுள்ளது.

அண்மையில் இடம்பெற்ற போட்டியில் மன்னார் வட்டக்கண்டல் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையை எதிர்த்து யாழ்ப்பாணம் கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி அணி மோதியது.

இதில் கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி அணி 5 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

2025 ஆம் ஆண்டுக்கான சிறந்த கிரிக்கெட் வீராங்கனையாக கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி மாணவி எஸ். சபானா தெரிவு செய்யப்பட்டார்.


அத்தோடு வடமராட்சி வலயக் கிரிக்கெட்டில் முதன்முறையாக கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி அணி சம்பியன் என்ற பெருமையைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## நாவல் பழம்

Botanical Name-
Syzygium cumini
Family-Myrtaceae



நாவல்பழம் எமது பிரதேசத் திற்குரிய பழமாகும். ஊட்டச்சத்துக் கள் நிறைந்ததும், பல மருத்துவக் குணங்கள் நிறைந்ததுமாகும். நாவல் பழத்தில் உயிர்சத்து C நிறைந்துள்ளதால் மிகச் சிறந்த அன்ரிஒக்ஸிடன்ட் ஆகும். இதனால் நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கும்.

மேலும் இப் பழங்களில் காணப்படும் உயிர்ச்சத்து A, C என்பன கண்பார்வைத் திறனை அதிகரிக்கும். நாவல் பழங்களைச் சாப்பிட்டு வந்தால் இரத்தத்தில் ஈமோகுளோபின் அளவை அதிகரிக்கும்.

மேலும் புற்றுநோய் வராமல் தடுக்கும். நீரில் கரையக்கூடிய நார்ச்சத்துக்கள் அதிகம் உள்ளதால் வயிற்றுக்கோளாறுகள் செரிமானப் பிரச்சினைகளை சீர் செய்யும். மேலும் சிறுநீரகக் கற்கள் உருவாகாமல் தடுக்கிறது.

நீரிழிவு நோயாளிகளுக்கு இரத்தத்தில் சீனியின் அளவைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கு நாவல் பழ கொட்டைகள் அதிகம் பயன்படுத்தப்படுகிறது.

தினம் பழம் கிடைக்கும் காலங்களில் 20 பழங்கள் வரை சாப்பிடலாம். நாவல் பழங்களை வெறும் வயிற்றில் சாப்பிடக்கூடாது. நாவல் பழங்கள் சாப்பிடும் போது பால் அருந்ததுவதைத் தவிர்க்க வேண்டும்.

மேலும் நாவல் பழங்களில் கல்சியம், பொஸ்பரஸ், இரும்புச் சத்து, உயிர்ச்சத்து B போன்ற சத்துக்கள் நிறைந்துள்ளன. நாவல் பழங்களை சாப்பிட்டுவர கல்லீரல் பிரச்சினைகள் தீரும். வயிற்றுப் போக்கினால் பாதிக்கப்பட்டவர்கள் நாவல் பழங்களிலிருந்து யூஸ் தயாரித்து பருகலாம்.

நாவல் பழங்களைச் சாப்பிட்டு வர சருமத்தில் ஏற்படும் வெண் புள்ளி நோய்களுக்கு சிறந்த நிவாரணமாகும். எப்படியெனில் நாவல் பழங்களில் காணப்படும் சத்துக்கள் மெலகனின் கலங்களை தூண்டக்கூடியது. பழங்களில் காணப்படும் நார்ச்சத்து, மற்றும் பொட்டாசியம் சத்துக்களானது உயர் இரத்த அழுத்தம் ஏற்படுவதை தடுப்பதுடன் மாரடைப்பு ஏற்படும் அபாயத்தன்மையைக் குறைக்கிறது.

நாவல் பழங்கள் குறைந்த கலோரியைக் கொண்டது. ஆனால் அதிக சுவை உடையது. முக்கியமாக போலிக்அமிலம் அதிகளவில் உள்ளது. இரத்தத்தை விருத்தி செய்யக்கூடியது. நரம்பு மண்டலத்தை வலுப்படுத்தும் . இது நீரிழிவு நோயாளிக்கு ஏற்ற பழமாகும். அஜீரண மண்டலத்தை சீர்படுத்தி, தோல் ஆரோக்கியத்தையும் பேணக் கூடியது.

இப் பழங்களில் காணப்படும் உயிர்சத்து C முகத்தில் பருக்கள் வராது, வயதான தோற்றத்தை ஏற்படுத்தாது முகத்தை பொலிவடையச் செய்யும். இப் பழங்களில் பாலிப்னோலிக் இருப்பதனால் நீரிழிவு சிகிச்சையில் முக்கிய கடமையாற்றுகிறது.

பழங்காலத்தில் பாரத தேசமானது "ஜம்புத்தீவு" அதாவது 'நாவல் தீவு' என்றே அழைக்கப்பட்டு வந்திருக்கிறது.

நாவல் மரங்கள் அதிகம் நிறைந்த நாடாக இந்தியா இருந்திருக்கிறது. நாவல் பழங்களின் மேல் சிறிது உப்பு தூவி சாப்பிடுவதால் மேலும் சிறந்த மருத்துவக்குணங்களைப் பெறலாம். நீரிழிவு நோயாளிகள் நாவல் பழங்களை சாப்பிடும் போது அதிக தாகம் மற்றும் அடிக்கடி சிறுநீர் கழித்தல் போன்ற நீரிழிவு அறிகுறிகளைக் குறைக்கும். இப் பழங்களில் காணப்படும் நார்ச் சத்தால் சீரான குடல் இயக்கங்களை ஊக்குவித்து மலச்சிக்கலை தடுக்கின்றது.

மற்றும் ஆரோக்கியமான செரிமான அமைப்பை பராமரிக்கின்றது. சிறு நீரகத்தில் உள்ள நச்சுக்களை வெளியேற்றி குமட்டல், வாந்தி போன்ற பிரச்சினைகளை தடுக்கின்றது. இந்தப் பழம் ஒரு குறைந்த கலோரி கொண்ட பழமாகும்.

உடல் எடை குறைப்பதற்காக எடுத்துக் கொள்ளப்படும் பழங்களில் நாவல்பழம் முக்கிய இடத்தில் உள்ளது. அத்துடன் அதிலடங்கியிருக்கும் நார்ச்சத்து உள்ளடக்கம் பசியில்லா உணர்வை வழங்குகிறது. அதனால் அதிகப்படியான உணவு சாப்பிடுவதைக் குறைக்கிறது.

நாவல் பழங்களில் காணப்படும் துவர்ப்பு கலந்த சுவையானது கரும் புள்ளிகள் மற்றும் முகச்சுருக்கங்களை நீக்குகிறது. இப் பழங்களில் காணப்படும் உயிர்சத்து A ஆனது கண் ஆரோக்கியத்தை பாதுகாக்கிறது. கண் சம்பந்தமான பிரச்சினைகள் வராமல் தடுக்கிறது.



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

நாவல் பழங்களில் காணப்படும் கல்சியம் மற்றும் பொஸ்பரஸ் போன்ற அத்தியாவசிய தாதுக்கள் எலும்புகள் மற்றும் பற்களை பராமரிக்க முக்கியமானது. நாவல் பழங்களில் உள்ள உயிர்த்துக்கள் மற்றும் தாதுக்கள் முடியை ஆரோக்கியமாக வைத்திருக்க உதவுகிறது. நாவல் பழங்களில் காணப்படும் உயிர்ச்சத்து C.A பக்ரீரியா, வைரஸ், பூஞ்சை போன்ற நுண் கிருமிகளால் ஏற்படும் தொற்றுக்களை குறைத்து நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கிறது. புளிப்பு, இனிப்பு, சிறிது துவர்ப்பும் கலந்த சுவையான பழங்களாகும்.

இப் பழங்களின் ஊதா நிறத்திற்கு காரணம் அந்தப் பழங்களில் காணப்படும் அன்ந்தொ சயனின் போன்ற ஆன்டிஒக்ஸிடன்ட் ஆகும்.

நாவல்பழங்களை மதியம் 12 மணியிலிருந்து 3 மணிவரை எடுத்துக் கொள்ள வேண்டும்.


# இராசிபலன்

14.07.2025
ஆனி 30 , திங்கட்கிழமை
சதுர்த்தி பின்னிரவு 12.24 மணிவரை

அவிட்டம் முற்பகல் 7.59 மணிவரை
சுபநேரம் 12.00-1.30 மணிவரை
இராகுகாலம்7.30-9.00 மணிவரை

சாங்கடகர சதுர்த்தி விரதம்,
சந்திராஷ்டமம்- ஆயிலியம்.

வளவன்





நீங்கள் எதிர்பாராத ஒருவர் உங்களைத் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசலாம், எதிர்காலம் இனிமையாக அமைய திட்டங்கள் தீட்டுவீர்கள், செய் தொழில் மேன்மையுண்டு.





அரசு வழியில் எதிர் பார்த்த சலுகைகள் கிடைக்கும் வாய்ப் புண்டு, புதிய முயற்சிகள் கைகூடும், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள்.




எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம்மாறுவர், தொழிலை விரிவு படுத்தும் எண்ணம் உருவாகும், வழிபாட்டால் வளர்ச்சி காண வேண்டிய நாள், பயணங்கள் கைகூடும்.





ஆரோக்கியத்தில் அச்சுறுத்தல்கள் தோன்றி மறையும், மகிழ்ச்சி குறையாதிருக்க மற்றவரை அனுசரித்துச் செல்ல வேண்டிய நாள், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.





புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், மனதில் நினைத்த புதிய திட்டங்களை வெற்றிகரமாக நிறைவேற்றுவீர்கள், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள்.




கூட்டு முயற்சியில் முன்னேற்றம் காண்பீர்கள், எதிரிகள் உதிரியாகும் நாள், குடும்பத்தில் உங்களின் செல்வாக்கு மேலோங்கும் நாள், போசன சுகமுண்டு.





வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், எதிர் பார்ப்புக்கள் நிறைவேறி ஏற்றம் பெறுவீர்கள், பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும், தாழ்ந்த சுபாவமுண்டு.





வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காணும் நாள், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம் பெறலாம்.




மனதில் புதிய சிந்தனைகள் தோன்றும், பாகப்பிரிவினைகள் சுமுகமாக அமையும், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.




எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், முன் கோபமும், அலைச்சலும் ஏற்படலாம், அதிகாரிகளின் ஆதரவும் பெருகும் நாள்.




விருப்பங்கள் நிறைவேற விரதம் வழிபாடுகளை நிறைவேற்றுவீர்கள், ஆதாயம் தரும் வேலையொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், சிந்தனை மிகுதியான நாள்.




தொழிலில் சில மாற்றங்களைச் செய்ய முற்படுவீர்கள், எதிர்பாராத தனவரவும் வந்து சேரலாம், உறவினர் விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது.

எல்லாரும் பார்த்து ரசிக்கும்படி வாழக் கற்றுக் கொள்.

noolaham.org | aavanaham.org

# யாழ்.பல்கலைக்கழக விவசாயபீடத்தின் சர்வதேச ஆராய்ச்சி மாநாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் கிளிநொச்சி அறிவியல் நகர் வளாகத்தில் அமைந்துள்ள விவசாயபீடமானது எமது பிரதேசத்தை மையப்படுத்தி உலர்வலய விவசாயம் பற்றிய சர்வதேச ஆராய்ச்சி மாநாடு ஒன்றினை 2015 ஆம் ஆண்டு தொடக்கம் வருடம் தோறும் நடாத்திவருகிறது.

இம்முறை பதினோராவது உலர்வலய விவசாயத்திற்கான சர்வதேச ஆராய்ச்சி மாநாடு எதிர்வரும் 16 ஆம் திகதி கிளிநொச்சி அறிவியல் நகர் வளாகத்தில் அமைந்துள்ள விவசாயபீட மாநாட்டு அரங்கத்தில் "மீளுருவாக்க விவசாயத்திற்கான பல்துறை அணுகு முறைகள்" ("Multidisciplinary Approaches for Regenerative Agriculture") என்ற முதன்மைத் தொனிப்பொருளில் நடைபெறவுள்ளது.

இவ்வாராய்ச்சி மாநாட்டின் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைகழகத்தினுடைய துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறீசற்குணராஜா கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

இம்மாநாட்டின் பேச்சாளர்களாக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி மஞ்சுள குலரத்ன நியூசிலாந்தின் லிங்கன் பல்கலைக்கழகத்தில் இருந்தும், ஜப்பான் யமகடா பல்கலைக்கழகத்தின் இணைப் பேராசிரியர் யுகா சசாகி ஜப்பானில் இருந்தும் விவசாய பீடத்துக்கு வருகை தருவதோடு, இலங்கை பெராதெனிய பல்கலைக்ககழத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி ஹிமால் சுரவீரவும் கலந்து உரையாற்றவுள்ளனர்.

மேலும் இவ்வாராய்ச்சி மாநாட்டில் இலங்கை மற்றும் சர்வதேச ஆய்வாளர்களால் பயிராக்கவியல், விலங்கு விஞ்ஞானம் மற்றும் நீருயிரின வளர்ப்பு, பயிர் பாதுகாப்பு மற்றும் உயிர்தொழிநுட்பவியல், மண், சூழல் மற்றும் நீர் விஞ்ஞானம், உணவு விஞ்ஞானமும் மற்றும் போசனையும், பொருளாதாரம் மற்றும் அறிவூட்டல் ஆகிய உபதொனிப் பொருள்களில் 37 ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டு, மதிப்பாய்வு செய்யப்படவுள்ளன.

இம்மாநாட்டிற்கு துறைசார் நிபுணர்கள் அழைக்கப்பட்டுள்ளதோடு. இதன் மூலம் எதிர்காலத்தில் எவ்வாறான நுட்பங்கள் உலர்வலய விவசாயத்தில் புகுத்தப்பட வேண்டும் என்பது பற்றிய கலந்துரையாடல்களும் இம்மாநாட்டில் இடம்பெறும் என்பதும் குறிப்பிடத்தக்கது. (8)





யாழ்.போதனா வைத்தியசாலைக்கு சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ மற்றும் கடற்றொழில் நீரியல்வள அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் பாராளுமன்ற உறுப்பினர்களான க.இளங்குமரன், வைத்தியர் ச.ஸ்ரீபவானந்தராஜா மற்றும் ஜெ.றஜிவன் ஆகியோர் கடந்த சனிக்கிழமை நேரில் சென்றிருந்தனர். அதன்போது வைத்தியசாலையில் உள்ள வளங்கள் மற்றும் தேவைகள் தொடர்பாக சுகாதார அமைச்சர் பார்வையிட்டதோடு வைத்திய நிபுணர்களுடனும் கலந்துரையாடினார். (படம்: சிவசாந்தன்)

# எழுவைதீவு கடலில் கஞ்சா மீட்பு!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் எழுவை தீவு பகுதியில் 15 மில்லியன் ரூபாய் பெறுமதியான கேரள கஞ்சா சனிக்கிழமை மீட்கப்பட்டுள்ளது.

எழுவைதீவு கடற்பகுதியில் கடற்படையினர் மேற்கொண்ட சுற்றுகாவல் நடவடிக்கையின் போது, கடலில் சந்தேகத்திற்கு இடமான முறையில் மிதந்து வந்த பொதியொன்றினை மீட்டு, சோதனையிட்ட போது அதனுள் இருந்து சுமார் 15மில்லியன் ரூபாய் பெறுமதியான 38 கிலோ 700 கிராம் கேரள கஞ்சா மீட்கப்பட்டுள்ளது.



மீட்கப்பட்ட கஞ்சா பொதிகளை மேலதிக சட்ட நடவடிக்கைக்காக ஊர்காவற்துறை பொலிஸாரிடம் கடற்படையினர் ஒப்படைத்துள்ளனர். (8-33)

# தேசிய உற்பத்தித் திறன் விருதுகள் போட்டி 2025/2026 இற்கான தெளிவூட்டல் செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சின் தேசிய உற்பத்தித் திறன் செயலகத்தினால் 2025/2026 ஆம் ஆண்டுக்கான தேசிய உற்பத்தித்திறன் விருதுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இப்போட்டித் தொடருக்காக யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள பாடசாலைத் துறை, அரசதுறை, உற்பத்தி மற்றும் சேவைகள் துறை நிறுவனங்கள் விண்ணப்பிப்பதற்கான தெளிவூட்டும் செயலமர்வு நாளை 15 ஆம் திகதி செவ் வாய்க்கிழமை காலை 9 மணி முதல் மாலை 3.30 மணி வரை மூன்று பிரிவுகளாக யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் நடைபெறவுள்ளது.

இச்செயலமர்வில் உற்பத்தித்திறன் விருதுகளுக்கு விண்ணப்பிக்க விரும்பும் பாடசாலைகள், நிறுவனங்கள் சார்பான பிரதிநிதி ஒருவரைக் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

இப்போட்டிக்கான முதற்கட்டப் பதிவுக்கான முடிவுத் திகதி 31.08.2025. விண்ணப்பப்படிவத்தைச் சமர்ப்பிப்பதற்கான முடிவுத் திகதி 30.01.2026 ஆகும். மேற்படி தகவலினை யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் அறிவித்துள்ளார். (8)

| துறை | நேரம் | நிகழ்வு நடைபெறும் இடம் |
|---|---|---|
| பாடசாலைத்துறை | மு.ப 9 -மு.ப 11.30 | மாவட்டச் செயலகக் கேட்போர் கூடம் |
| அரச துறை | பி.ப1 -பி.ப 3.30 | மாவட்டச் செயலகக் கேட்போர் கூடம் |
| உற்பத்தி மற்றும் சேவைகள் துறை | மு.ப 9 -மு.ப 11.30 | மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபம் |

# க.பொ.த.சாதாரண தரப்பரீட்சை பெறுபேறுகள்-2024

## யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

**9ஏ -ஆங்கில மொழி மூலம்**

எ.பவித்ரன், இ.சிவராம், ஜி.பவேஷன், ஜெ.பவனன், ஜெ.சஸ்மிதன், கே.சதுர்ஷன், கே.ஷெயோன், எம்.திகலோலிபவன், எம்.சயனுஜன், என்.தருண், ஆர்.திருவகன், ஆர்.துஷானன், ஆர்.ஆதிஷ், ஆர்.மஞ்சுயன், ஆர்.பிரசன்னா, எஸ்.லிவிந், எஸ்.நிஷான், எஸ்.பிரவீனன், எஸ்.விதுர்ஷன், எஸ்.கேஷிகன், எஸ்.விஷால், எஸ்.அபிநாஷ், எஸ்.ஆத்மன், எஸ்.சிவசங்கர், எஸ்.பகலவன், எஸ்.அர்ஷன், எஸ்.ஆக்ஷயன், ரி.சுவர்மன், ரி.ஜனுஜன், வி.சிறிராம்.

**9ஏ- தமிழ்மொழி மூலம்**

எ.அலெக்லேர், எ.ஜனார்தன், பி.ஆர்திகன், இ.அனோரிஷன், ஜி.மிதுன், ஜி.சஞ்சய், ஜி.வாரந்தன், எல்.நாககீர்தனன், ஜெ.பவனுஷ்யன், ஜெ.ஜெயசேதுபன், ஜெ.சங்கீத், கே.கிஷோபன், கே.டிஷான், கே.நவீன், கே.பிருந்தாபன், எல்.ஷங்கவன், எம்.கேஷியன், எம்.ஷானுஜன், எம்.அஷாந், எம்.திருமாறன், என்.விஷ்னுஜன், என்.நதுர்ஷன், பி.அஹரன், பி.கோபிஷன், பி.பிரவீன், பி.சதுர்சன், பி.பிரஷ்னா, பி.அபிராம், பி.ஹனாதீபன், பி.வினுஜன், எஸ்.பவிசன், எஸ்.தமிழ்நிலவன், எஸ்.மதிவர்மன், எஸ்.கேசவராம், கே.றிஷான், கே.ஜனுஜன், எஸ்.தஷ்வின், எஸ்.மானசன், எஸ்.ஹரிஷ், எஸ்.ஜட்சனன், எஸ்.திரியம்பகன், எஸ்.நிதுஷன், எஸ்.அச்சுதன், ரி.அக்ஷயன், ரி.மிதுஷன், ரி.அபிநயன், ரி.ஹரிபிரியன், ரி.தேனுஜன், யு.திஷாரகன், வி.ஹினோசன், வி.பானுஜன், வி.சுவர்னன்.

**8ஏபி - ஆங்கில மொழி மூலம்**

எ.திபிசன், எ.மதுசாதனன், பி.ஜஸ்மிதன், ஜி.அருளகன், ஜெ.அபிஷேஜ், ஜெ.பிரசன்னா, ஜெ.டக்சனன், ஜெ.அக்சயன், கே.பிராக்மன், எம்.தீபிகன், என்.சங்கீர்தனன், பி.ஷர்மிலன், பி.கார்த்திகேயன், ஆர்.கிஷான், எஸ்.மதீசனன், எஸ்.சேனுஹான், எஸ்.மிதுஷான், ரி.றிஷிகன், வி.டனுஜன், டபிள்யூ.நூஹாநகுல.

**8ஏபி -தமிழ் மொழி மூலம்**

பி.யனுஷன், ஜி.அக்ருரன், ஜெ.அபிஷயன், ஜெ.ஜென்சன், கே.சமீரனன், கே.அரோஷன், கே.கோலமயிலோன், எம்.சுருக்ஷன், என்.ஜதுபிரியன், பி.ஜினுசன், ஆர்.அனுஷாந், ஆர்.அஷ்வின், எஸ்.சிவவர்ஷன், எஸ்.ஷெயோன், எஸ்.திவியலக்சன், எஸ்.அபிராம், எஸ்.ஹஜனன், எஸ்.ஜஷ்வர்யன், எஸ்.பாவலன், எஸ்.அர்ஜனன், எஸ்.தாபிசன், எஸ்.அபிநீதன், எஸ்.தரன்யன், ரி.டிஷாந், வி.விஷ்விகன், டபிள்யூ.கோபிராஜ்.

**8ஏசி - ஆங்கில மொழி மூலம்**

ஜி.ஜெகதீஷன், ஜெ.ஷெரோன், எம்.தக்ஷனன், ஆர்.ஷரஜனன், எஸ்.றெஷான், எஸ்.பவிதரன், எஸ்.அபிசரன், ரி.யாகுலன்

**8ஏசி - தமிழ் மொழி மூலம்**

சீ.வேணுமிதன், ஜெ.பிரணவன், கே.லோஷன், கே.ஜதுர்ஷன், கே.ஆனந்தசாரங்கன், எம்.மைத்ரேஜா, எம்.மதுஷன், பி.கஜானன், பி.பிரபாஷ்ராஜ், ஆர்.லயசர்மா, எஸ்.நிதுஷன், எஸ்.துவாரகன், எஸ்.துபாரகன், எஸ்.ஷகீஷ்ணா, எஸ்.தருணன், எஸ்.சஜீவ், ரி.திஹாலாவன், வி.ரிஷாபன்

**8ஏ எஸ் - தமிழ்மொழி மூலம்**

ஆர்.இளங்கீரன்

## யா/கொக்குவில் கிழக்கு நாமகள் வித்தியாலயம்

இ.ஜானுஜா-5ஏ பி 3சி

## யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி

எ.டிஷான்-9ஏ, எல்.விமலக்ஷன்-9ஏ, கே.தனுசியன்-8ஏ பி, ஆர்.நிலவன், 8ஏ பி, சி.நெடுமாறன்-8ஏ பி, எஸ்.பவிதரன்-8ஏ பி, எஸ்.ஜபேஷ்-8ஏ பி, கே.பிரம்ஷாந்-8ஏ பி, ஆர்.சங்கீப்-8 ஏ சி, எம்.பர்நித்-7 ஏ 2பி, கே.ராய்ஸ்-7ஏ 2பி, எம்.உமாசுதன்-7ஏ பி சி, ரி.பங்கஜன்-7ஏ பி சி, எஸ்.ஷிரோன்-6ஏ 3பி, பி.டியூரன்-6ஏ 2பி சி, பி.லோஹிதன்-6ஏ 2பி சி, எஸ்.ரிஷான் கெயித்த-6ஏ 2பி எஸ், என்.விசாலன்- 6ஏ பி 2சி, பி.ஷர்மிலன்-6ஏ பி 2சி, எஸ்.கிருஷிகேசன்-6ஏ பி சி எஸ், ரி.அக்ஷயன்-5ஏ 3பி சி, கே.டினுத்தன்-5ஏ 2பி 2சி

## யாழ்.புனித பத்திரிசியார் கல்லூரி

ஜெ.தனுசான்-9ஏ, சி.கிங்ஸ்ரன்-9ஏ, எ.றேகன்-9ஏ, எஸ்.சிலம்பரசன்-9ஏ, ரி.துஹிஷ்-9ஏ, எ.அபிஷேஹேன்-9ஏ, கே.எவோன்ஷன்-8ஏ பி, பி.அபிஷேத்-8ஏ பி, ரி.கபிலன்-8ஏ பி, வி.டெனிஸ்ரன்-8ஏ பி, சி.நிதீஷன்-8ஏ சி, வி.பிரியதர்ஷன்-8ஏ சி, எ.ரிஷான்-7ஏ 2பி, எஸ்.மகிலினிகன்- 7ஏ 2 பி, எஸ்.ஹரிகரன்-7ஏ 2பி, எஸ்.துவாரகன்-7ஏ2பி, எல்.ஜிஷ்னேசன்-6ஏ 3பி, எ.அபிஷன்-6ஏ 2பி சி, எஸ்.விஷ்னுவர்தணன்-6ஏ 2பி எஸ், சி.ஆகாஷ்-6ஏ பி சி எஸ், ஜெ.பானுஜன்-5ஏ 4பி, பி.டெலாரிஷ்-5ஏ 3பி எஸ், ரி.சாய்பிரகாஷ்-5ஏ 2பி 2சி, டி.ஜெனிமாரன்-5ஏ 2பி சி எஸ், எ.ஜிடேஷேகினோ -5ஏ 2பி சி எஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கில் ஒரு தாதியர் கூட இல்லாமல்

# 33 உள்ளூர் வைத்தியசாலைகள்!

## அமைச்சர் நளிந்த சுட்டிக்காட்டு



(யாழ்ப்பாணம்)

**வடமாகாணத்தில் ஒரு தாதியர் கூட இல்லாத 33 உள்ளூர் வைத்தியசாலைகள் உள்ளன என்றும், எதிர்காலத்தில் புதிய செவிலியர்களை வழங்குவதன் மூலம் இந்தக் குறையை இல்லாது செய்ய நிரப்ப முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.**

நயினாதீவு மாவட்ட வைத்தியசாலையின் புதிய வெளி நோயாளர் பிரிவு கட்டடத்தின் திறப்பு விழா சுகாதார மற்றும் ஊடக அமைச்சர் வைத்தியர் நளிந்த ஜயதிஸ்ஸ தலைமையில் நடைபெற்றது.

இதன்போது கருத்துத் தெரிவித்த அமைச்சர்,

சுகாதார சேவை மக்களை மையமாகக் கொண்டதாக இருக்க வேண்டும். தற்போதுள்ள சுகாதார சேவை வைத்தியர்களை மையமாகக் கொண்டதாக உள்ளது.

மக்கள் மருத்துவ சேவைகளைப் பெற வெகுதூரம் செல்லப் பழகிவிட்டனர். இந்த அணுகுமுறை யாழ்ப்பாண வைத்தியசாலையின் நோயாளிகளின் வருகைக்கு வழி வகுத்தது.

இதுபோன்ற தீவுகளில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களிலிருந்து சிறந்த தரமான சேவையை வழங்க முடியும். இந்தக் கட்டடத்தின் கட்டுமானத்தை மிகக் குறுகிய காலத்தில் முடிக்க கடற்படை உழைத்திருப்பது மகிழ்ச்சியளிக்கும் விடயம்.

சிகிச்சை பெற வரும் மக்கள் வரிசையில் காத்திருக்காமல், நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி சிகிச்சைக்காக பரிந்துரைக்கப்படுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும், இது மக்களுக்குத் தேவையான சேவை என்றும் அமைச்சர் கூறினார்.

மருத்துவ உபகரணங்கள் மற்றும் வாகனங்கள், அம்புலன்ஸ்கள் பராமரிப்பு விடயத்தில் சுகாதார அமைச்சகம் பலவீனமாக உள்ளது என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (8)

# வவுனியாவில் அமிர்தலிங்கத்தின் நினைவு தினம் அனுஷ்டிப்பு



(வவுனியா)

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தினால் தமிழர் விடுதலை கூட்டணியின் தலைவர் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கத்தின் 36 ஆவது நினைவு தினம் வவுனியா கோயில் குளத்தில் அமைந் துள்ள க.உமாமகேஸ்வரன் நூலகத்தில் நேற்று இடம்பெற்றது.

ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் உறுப்பினரும் வவுனியா மாநகர சபையின் முதல்வருமான சு.காண்டீபன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் அ.அமிர்தலிங்கத்தின் உருவப்படத்திற்கு மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர்.

நிகழ்வில், கழகத்தின் வவுனியா மாவட்ட முக்கியஸ்தர் க.சந்திரகுலசிங்கம், ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் செயலாளர் நா.ரட்ணலிங்கம், தமிழரசுக்கட்சியின் சிரேஸ்ட மத்தியகுழு உறுப்பினர் நா.சேனாதிராஜா மற்றும் கழகத்தின் உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். (8)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 250 | 280 | 350 | 400 | 300 |
| உருளைக்கிழங்கு | 200 | 190 | 200 | 180 | 200 |
| பச்சைமிளகாய் | 400 | 400 | 450 | 350 | 600 |
| தக்காளி | 160 | 180 | 200 | 150 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 300 | 280 | 300 | 250 |
| கோவா | 300 | 400 | 500 | 300 | 400 |
| கரட் | 450 | 500 | 550 | 370 | 500 |
| பூசணி | 120 | 160 | 130 | 120 | 150 |
| புடோல் | 120 | 150 | 200 | 100 | 200 |
| வாழைக்காய் | 120 | 120 | 120 | 80 | 150 |
| சின்ன வெங்காயம் | 350 | 150-350 | 350 | 350 | 400 |
| பெரிய வெங்காயம் | 140 | 160 | 130 | 120 | 150 |
| பாகற்காய் | 600 | 650 | 650 | 600 | 600 |
| வெண்டக்காய் | 150 | 150 | 170 | 120 | 300 |
| கருணைக் கிழங்கு | 350 | 300 | 200 | 250 | 400 |
| பயற்றங்காய் | 350 | 300 | 300 | 300 | 300 |
| லீக்ஸ் | 350 | 350 | 300 | 250 | 320 |
| பீற்றூட் | 200 | 200 | 250 | 240 | 250 |
| கறிமிளகாய் | 650 | 700 | 600 | 550 | 600 |
| முருங்கைக்காய் | 400 | 450 | 600 | 420 | 600 |
| போஞ்சி | 400 | 500 | 500 | 450 | 600 |
| கத்தரிதம்புள்ள | 200 | 250 | 300 | -- | 250 |
| கீரை - 1 பிடி | 80 | 40-120 | 120 | 50 | 80 |
| தேசிக்காய் | 300 | 300 | 300 | 250 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 150 | 160 | 120 | 80-150 | 120-150 |
| இராசவள்ளி | 600 | 600 | 600 | 580 | 700 |
| வெங்காயப்பூ | 400 | 400 | 500 | -- | 600 |
| முள்ளங்கி | 200 | 160 | 160 | 120 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 50 | 150 | 100 | 60 |
| வல்லாரை | 80 | 60 | 100 | 80 | 100 |
| ஈரப்பலா | 150 | 150 | 100 | -- | 200 |

# தீவுப் பகுதிகளுக்கு சுற்றுலா செல்லும் பயணிகளின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படும்

## அமைச்சர் சந்திரசேகர்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் தீவுப் பகுதிகளுக்கு சுற்றுலா செல்லும் பயணிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்த அனைத்து நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படும் என கடற்றொழில், நீரியல் மற்றும் கடல்வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.

அத்துடன், கடல்போக்குவரத்து சேவை வழங்கும் படகுகளின் தரம் மற்றும் முன் பாதுகாப்பு ஏற்பாடுகள் ஆகியன தொடர்பில் தொடர் கண்காணிப்பில் ஈடுபடுமாறு பொலிஸ் மற்றும் கடற்படையினருக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது எனவும் அமைச்சர் கூறினார்.

நெடுந்தீவைச் சேர்ந்த தனியார் ஒருவருக்கு சொந்தமான சுற்றுலாப்பயணிகளை ஏற்றும் சிறிய ரக படகில் நெடுந்தீவுக்கு சென்று திரும்பும் போது படகில் ஏற்பட்ட கோளாறு காரணமாக படகு மூழ்கியுள்ளதுடன் பயணிகள் 12 பேர் 2 பணியாளர்கள் என 14 பேர் உயிராபத்து இன்றி மீட்கப்பட்டுள்ளனர்.

குறித்த சுற்றுலா படகில் இருந்து வெள்ளைக்கொடி காட்டுவதனை அவதானித்த அவ்வழியே சென்ற நெடுந்தீவு தனியார் படகான சபரிஷ் படகு பணியாளர்கள் விரைந்து செயற்பட்டு சேசமடைந்த கடலில் மூழ்கியவர்களை காப்பாற்றியுள்ளனர்.

கடற்படையினரும் முழு வீச்சுடன் செயற்பட்டுள்ளனர். இவர்களுக்கு எனது நன்றிகளையும் பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

கடல் பயணத்தின்போது பின்பற்ற வேண்டிய முன் பாதுகாப்பு ஏற்பாடுகள் தொடர்பில் உரிய அறிவுறுத்தல்கள் ஏற்கனவே விடுக்கப்பட்டுள்ளன. அவை முழுமையாக பின்பற்றப்பட வேண்டும் எனவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (8)

# நெடுந்தீவில் தமிழக மீனவர்கள் 7 பேர் கைது!

(யாழ்ப்பாணம்)

இலங்கை கடற்பரப்பினுள் அத்துமீறி நுழைந்து கடற்றொழிலில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 7 தமிழக மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இலங்கை கடற்படையினர் கடலில் மேற்கொண்ட சுற்றுக்காவல் நடவடிக்கையின் போது, நெடுந்தீவை அண்டிய கடற்பரப்பில் மீன் பிடியில் ஈடுபட்டிருந்த 7 தமிழக மீனவர்களை கைது செய்தனர்.


அதன்போது அவர்களின் படகினையும் கடற்படையினர் கைப்பற்றினர்.

கைதான மீனவர்களையும், படகினையும் மயிலிட்டி துறைமுகத்திற்கு கொண்டு சென்ற கடற்படையினர், மீனவர்களை மேலதிக சட்ட நடவடிக்கைக்காக கடற்றொழிலில் நீரியல் வளத்துறை அதிகாரிகளிடம் ஒப்படைத்துள்ளனர். (8-33)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## நடிகர் கோட்டா சீனிவாச ராவ் காலமானார்



(டில்லி)

பிரபல நடிகர் கோட்டா சீனிவாச ராவ் உடல் நலக் குறைவு காரணமாக காலமானார்.

ஆந்திராவைச் சேர்ந்த பிரபல நடிகரான கோட்டா சீனிவாச ராவ், தெலுங்கில் பல படங்களில் குணச்சித்திர வேடத்திலும், வில்லன் கதாபாத்திரத்திலும் நடித்துப் பிரபலமானவர்.

2003 ஆம் ஆண்டு வெளியான "சாமி" படத்தின் மூலம், தமிழ் திரையுலகில் அறிமுகமானார்.

மேலும், திருப்பாச்சி, குத்து, ஏய், கோ, சகுனி போன்ற பல படங்களில் நடித்திருந்தார்.

நடிகர், பாடகர், டப்பிங் கலைஞர் என, பன்முக திறமை கொண்ட இவர், மொத்தம் 750 படங்களுக்கும் மேல் நடித்துள்ளார்.

இறுதியாக இவரது நடிப்பில் 2023 ஆம் ஆண்டு, "சுவர்ண சுந்தரி" என்ற படம் வெளியானது.

இவரது மறைவுக்கு அனைவரும் இரங்கல் தெரிவித்து வருகின்றனர். (நி)

## உளவு பார்த்தத...

# 5 இலட்சம் ஆப்...

# வெளியேற்றி...

(டெஹ்ரான்)

**ஈரானுக்குள் சட்டவிரோதமாக புலம் பெயர்ந்து தங்கி, கூலி வேலை உள்ளிட்ட பல்வேறு வேலைகளைப் பார்த்து வந்த 5 இலட்சத்துக்கும் மேற்பட்ட ஆப்கானியர்கள், கடந்த 16 நாட்களில் சொந்த நாட்டுக்குத் திருப்பி அனுப்பப் பட்டுள்ளனர்.**

மேற்கு ஆசிய நாடான ஈரானில் சமீபத்தில் போர் நடந்தது. அணு ஆயுதங்களை உற்பத்தி செய்வதாகக் கூறி இஸ்ரேல் தாக்குதல் நடத்தியது. ஈரானும் அவர்களுக்கு பதிலடி தந்தது.

இறுதியில் இஸ்ரேலுக்கு ஆதரவாக அமெரிக்கா களமிறங்கி, ஈரானின் அணுசக்தி நிலையங்கள் மீது சக்தி வாய்ந்த குண்டுகளை வீசியது.

அதன் பின், இலக்குகளை எட்டிவிட்டதாகக் கூறி போரை நிறுத்த இஸ்ரேலிடம் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் கூறினார்.

இதை ஈரானும் ஏற்றது. 12 நாட்கள் நீடித்த போர் ஜூன் 24 இல் முடிவுக்கு வந்தது.

இந்நிலையில், போர் நிறுத்தம் தொடங்கிய நாளிலிருந்து ஈரானில் உரிய ஆவணங்கள் இன்றி சட்டவிரோதமாக தங்கியுள்ள, தன் அண்டை நாடான ஆப்கானிஸ்தானைச் சேர்ந்தவர்களை வெளியேற்றும் நடவடிக்கையை ஈரான் அரசு தீவிரப்படுத்தியது.

கடந்த 9 ஆம் திகதி வரை, 5

## நிபந்தனையை ஏற்றால் அணுசக்தி பேச்சுக்கு தயார்

### ஈரான் தெரிவிப்பு



(டெஹ்ரான்)

**அமெரிக்காவுடன் மீண்டும் அணுசக்தி தொடர்பான பேச்சுக்கு தயார் என ஈரான் வெளியுறவு அமைச்சர் அப்பாஸ் அராக்சி தெரிவித்தார்.**

**அணுசக்திப் பயன்பாடு தொடர்பாக அமெரிக்காவுடன் ஈரான் மறைமுக பேச்சில் ஈடுபட்டு வந்தது. யுரேனியம் செறிவூட்டலை 4 சதவீதத்திற்குள் குறைக்க அமெரிக்கா வலியுறுத்தியது.**

ஏனென்றால் யுரேனியத்தை 90 சதவீதத்திற்கு மேல் செறிவூட்டினால் அதை அணு ஆயுதமாக்க முடியும்.

இதற்கிடையே அமெரிக்காவின் திட்டத்தை ஈரான் நிராகரித்தது.

அதை தொடர்ந்தே இஸ்ரேல் மற்றும் அமெரிக்காவின் தாக்குதலை எதிர்கொண்டது.

இந்நிலையில், "எங்கள் நாட்டின் மீது தாக்குதல் நடத்த மாட்டோம் என உறுதியளித்தால், அணுசக்தி ஒப்பந்தம் தொடர்பாக அமெரிக்காவுடன் மீண்டும் பேச்சு நடத்த தயார்" என ஈரான் வெளியுறவு அமைச்சர் அப்பாஸ் அராக்சி நேற்று முன்தினம் தெரிவித்தார். (நி)

## குழந்தைகளின் மொழித்...

## பாதிக்கும் கையடக்க...

### ஆய்வில் அதிர்...

(டில்லி)

இந்தியாவில் 5 வயதுக்கு உட்பட்ட குழந்தைகள், கையடக்கத் தொலைபேசிகளை நாள்தோறும் 2 மணிநேரம் பார்ப்பதாக நிபுணர்களின் ஆய்வில் தெரியவந்துள்ளது.

இது, பரிந்துரைக்கப்பட்ட நேரத்தைவிட இரு மடங்கு அதிகம் என நிபுணர்கள் எச்சரித்துள்ளனர்.

சத்தீஸ்கரில் எய்ம்ஸ் மருத்துவமனையைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள், 5 வயதுக்கு உட்பட்ட குழந்தைகள், கையடக்கத் தொலைபேசிகளை பயன்படுத்தும் காலம் குறித்து ஆய்வு ஒன்றை நடத்தியுள்ளனர்.

இதன்போது நாடு முழுவதும் 2,857 குழந்தைகளின் நடவடிக்கைகள் கண்காணிக்கப்பட்டன.

இந்தநிலையில், ஒவ்வொரு குழந்தையும் நாள்தோறும், 2.22 மணி நேரம் கையடக்கத் தொலைபேசித் திரைகளை பார்ப்பது தெரியவந்துள்ளது.


உலக சுகாதார நிறுவனம் மற்றும் இந்தியக் குழந்தைகள் மருத்துவக் கல்லூரி ஆகியவற்றைச் சேர்ந்த நிபுணர்களால்,



குழந்தைகளுக்காக நிர்ணயிக்கப்பட்ட பாதுகாப்பான வரம்பை

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தாக தெரிவித்து
# ்கானியர்களை
# றியது ஈரான்



லட்சத்து 8.426 ஆப்கானியர்கள் அவர்களின் நாட்டுக்கு திருப்பி அனுப்பப்பட்டதாக சர்வதேச புலம்பெயர்ந்தோர் அமைப்பு தெரிவித்தது.

சமீபத்திய ஆண்டுகளில் நடந்த மக்களின் கட்டாய வெளியேற்றங்களில் இதுவே மிகப் பெரியது என ஐ.நா குறிப்பிட்டுள்ளது.

புலம்பெயர்ந்த ஆப்கானியர்கள், ஈரானின் முக்கிய நகரங்களான டெஹ்ரான், இஸ்பஹான் ஆகிய இடங்களில் கூலி வேலை உள்ளிட்டவற்றில் ஈடுபட்டவர்கள். அதில் சிலர் இஸ்ரேலிடம் பணம் பெற்று, உளவு பார்த்ததாக கைது செய்யப்பட்டனர்.

இதனால், புலம்பெயர்ந்த ஆப்கானியர்களால் தேச பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என கூறி அவர்களை வெளியேற்றத் தொடங்கினர்.

இதனால், குடும்பத்துடன் ஈரானில் வசித்த பெண்கள், குழந்தைகள் தற்போது வீடுகளை இழந்து, ஆப்கானிஸ்தானின் இஸ்லாம் காலா நகர முகாம்களில் தஞ்சமடைந்துள்ளனர். (நி)

# ித்திறன், அறிவாற்றலை
# கத் தொலைபேசிகள்
## ிர்ச்சித் தகவல்



விட இது இரு மடங்கு அதிகம் என்று, குறித்த ஆய்வின் முடிவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2 வயதுக்கு உட்பட்ட குழந்தைகள் கையடக்கத் தொலைபேசியைப் பார்க்கும் நேரத்தைப் பூஜ்ஜியமாக இருக்க வேண்டும் என்று நிபுணர்கள் நிர்ணயித்துள்ள சூழலில், அது தினமும் 1.23 மணி நேரமாக இருப்பது கவலையை அதிகரித்துள்ளதாக, ஆய்வில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, கையடக்கத் தொலைபேசி உள்ளிட்ட சாதனங்களைப் பார்ப்பதால் குழந்தைகளின் மொழித்திறன், அறிவாற்றல், சமூக நடத்தை போன்றவை பாதிக்கப்படுகின்றன.

அத்துடன், உடல் பருமனும் அதிகரிப்பதாக ஆய்வை மேற்கொண்ட நிபுணர்கள் எச்சரித்துள்ளனர்.

இந்த நிலையில், உணவு உண்ணும்போது, கையடக் கத் தொலைபேசியை பயன் படுத்துவதைப் பெற்றோர்கள் தவிர்க்க வேண்டும்.

குழந்தைகளை வெளியில் அழைத்துச் சென்று சமூக நடவடிக்கைகளில் ஈடுபடுவதை ஊக்குவிக்க வேண்டும் என்று நிபுணர்கள் அறிவுறுத்தியுள்ளனர். (நி)

# ஏமனில் குண்டு வெடிப்பு!
## காலப்ந்து விளையாடிக்கொண்டிருந்த 5 சிறுவர்கள் உயிரிழப்பு



(ஏமன்)

ஏமன் நாட்டின் தென் மேற்கில் உள்ள தைஸ் மாகாணத்தில் அல்-ஹாஷ்மா பகுதியில் கால்பந்து விளையாடிக் கொண்டிருந்த ஐந்து சிறுவர்கள் குண்டு வெடிப்பில் உயிரிழந்தனர்.

இந்தச் சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை இரவு நிகழ்ந்ததாக மனித உரிமை அமைப்புகளும், நேரில் கண்ட சாட்சிகளும் தெரிவித்துள்ளனர்.

ஏமன் அரசுடன் கூட்டணியில் உள்ள இஸ்லாஹ் கட்சியால் ஆதரிக்கப்படும் போராளிகள் குழுவால் பீரங்கி குண்டு வீசப்பட்டதாக கூறப்படுகிறது.

ஏமன் மனித உரிமைகள் குழு, இந்த சம்பவத்தைக் கண்டித்து, சிறுவர்களின் சிதைந்த உடல்களின் புகைப்படங்களுடன் அறிக்கை வெளியிட்டுள்ளது.

மேலும் மூன்று பேர் காயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

ஈரானின் ஆதரவு பெற்ற ஹவுதி கிளர்ச்சியாளர்களுக்கும், இஸ்லாஹ் கட்சியால் ஆதரிக்கப்படும் பிற போராளிகளுக்கும் இடையே நடக்கும் உள்நாட்டுப் போரின் முக்கிய களமாக தைஸ் நகரம் இருந்து வருகிறது.

ஏமனில் உள்நாட்டுப் போர் 2014 இல் ஆரம்பமாகியது. அப்போது ஹவுதிகள் தலைநகர் சனாவையும் வடக்கு ஏமனின் பெரும் பகுதியையும் கைப்பற்றினர். (நி)

# ரஷ்யாவுக்கு ஆதரவு வடகொரியா அறிவிப்பு

(பியாங்யாங்)

உக்ரைனில் நடைபெறும் போருக்கு ரஷ்யாவுக்கு பூரண ஆதரவு வழங்குவதாக வட கொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன் தெரிவித்துள்ளதாக பியாங்யாங் அரசு ஊடகம் தெரிவித்துள்ளது.

வடகொரியாவில் ரஷ்ய வெளியுறவு அமைச்சர் செர்கே லாவ்ரோவுடன் நடைபெற்ற பேச்சுவார்த்தையில் கிம் ஜாங் உன், "உக்ரைனிய நெருக்கடிக்கான மூல காரணத்தை சமாளிக்க ரஷ்யா எடுத்த அனைத்து நடவடிக்கைகளுக்கும்" தனது முழுமையான ஆதரவைத் தெரிவித்துள்ளார்.

மேற்கத்தேய நாடுகள், கடந்த வருடம் முழுவதிலும் வட கொரியா சுமார் 11,000 இராணுவத்தினரை ரஷ்யாவுக்கு அனுப்பியிருப்பதாக நம்புகின்றன.

2022 பெப்ரவரியில் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் உக்ரைனை முழுமையாக கைப்பற்றும் நோக்கில் யுத்தத்தை தொடங்கியதையடுத்து, ரஷ்யாவுக்கு வடகொரியாவின் ஆதரவு தொடர்ந்து வலுப்பெற்று வருகிறது.

கிம் மற்றும் லாவ்ரோவின் சந்திப்பு "தோழமை மற்றும் நம்பிக்கையால் நிரம்பிய சூழலில்" நடைபெற்றது என வட கொரிய அரசு ஊடகம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில், அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் மீண்டும் உக்ரைனுக்கு ஆயுதங்களை வழங்கும் நடவடிக்கையைத் தொடங்கியுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. வடகொரியா, ஏப்ரல் மாதத்தில்தான் தங்கள் படைகளை ரஷ்யாவுக்கு அனுப்பியதைப் பகிரங்கமாக ஒப்புக் கொண்டது.

ஆனால் உக்ரைனும் மேற்கு நாடுகளும், பல மாதங்களாகவே வடகொரிய படைகள் ரஷ்ய-உக்ரைன் எல்லையில் செயற்பட்டுவருவதாகக் கூறி வந்தனர்.

கடந்த ஆண்டு ஜூனில் கிம் ஜாங் உன் மற்றும் விளாடிமிர் புடின் இடையே தற்காலிக இராணுவ ஒத்துழைப்பு உடன்பாடு கைச்சாத்தாகி, எதிரிகளால் தாக்கப்பட்டால், ஒருவருக்கொருவர் ஆதரவு தர ஒப்புக் கொண்டனர். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

கவிஞர் சேரனின் எழுத்துக்கள் குறித்த . பல்வேறு மொழிகளில் எழுதப்பட்ட 26 கட்டுரைகளின் பெருந் தொகுப்பான 'உறைய மறுக்கும் காலம்' நூல் வெளியீடும் தமிழக இலக்கிய ஆளுமை பவா செல்லத்துரை, திரைப்பட இயக்குநர் லெனின் பாரதி ஆகியோரின் உரையும் சந்திப்பும் நாளை செவ்வாய்க் கிழமை மாலை 4 மணி தொடக்கம் 8 மணி வரை இல.286, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கலைத் தூது கலையகத்தில் இடம்பெற உள்ளது.

நூல் வெளியீட்டு நிகழ்வு மூத்த கவிஞர் சோ.பத்மநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது. நூல் குறித்த உரையை கவிஞர் த. அஜந்த குமாரும், எழுத்தாளர் இ . இராஜேஸ்கண்ணனும் நிகழ்த்த உள்ளனர். உரையாடல் அரங்கை லண்டன் சமூகம் இயல் பதிப்பாளர் பால சபேசன் வழிப்படுத்த உள்ளார். (3)

## அமிர்தலிங்கத்தின் 36 ஆவது ஆண்டு நினைவேந்தல் அனுஷ்டிப்பு

(அராலி)

இலங்கையின் முதலாவது தமிழ் எதிர்க்கட்சி தலைவராக இருந்த முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கத்தின் 36 ஆவது ஆண்டு நினைவு தினம் நேற்றைய தினம் பண்ணாகம் வலி மேற்கு பிரதேச சபைக்கு முன்பாக உள்ள அமரரது உருவச் சிலையடியில் நினைவு தினம் இடம்பெற்றது.

பண்ணாகம் கிராம அபிவிருத்தி சங்கத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற நிகழ்வின்போது அமரரது உருவச்சிலைக்கு மலர்மாலை அணிவிக்கப்பட்டு சுடரேற்றி மலர்தூவி அஞ்சலி செலுத் தப்பட்டது.

இதேவேளை அமிர்தலிங்கம் அறக் கட்டளை நிலையத்தின் ஏற்பாட்டில் மூளாயில் அமைந்துள்ள அன்னாரது இல்லத்திலும் நினைவு தினம் அனுஷ்டிக்கப்பட்டது. இதில் அமரரின் உருவச் சிலைக்கு மலர்மாலை அணிவித்து மலர்தூவியும் அஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்நிகழ்வில் வலி மேற்கு பிரதேசசபை தவிசாளர் ச.ஜயந்தன், பிரதேசசபை உறுப்பினர்கள் மற்றும் கட்சி ஆதரவாளர்கள் பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டனர். (8-104)


கல்யாணமாலை
சர்வதேச இலவச திருமண சேவை

இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு:1983 இந்து
நட்சத்திரம்: அத்தம்
கி.பா: 14
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: A/L, Driver(own)
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/15548

பிறப்பு: 1992 இந்து
நட்சத்திரம்: பூசம்
1 இல் செவ்
கி.பா: 22 1/2
உயரம்:5'7"
தகைமை/தொழில்:BIT, Teacher
எதிர்பார்ப்பு: அரச தொழில்
தொ.இ: B/15550

பிறப்பு:1991 இந்து
நட்சத்திரம்: மகம்
8 இல் செவ்
கி.பா:67 1/2
உயரம்:5'6"
தகைமை/தொழில்:IT,Supervisor (சுவிஸ்)
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/15551

பிறப்பு: 1996 இந்து
நட்சத்திரம்:திருவாதிரை
12 இல் செவ்
உயரம்:5'9"
தகைமை/தொழில்:BSc, MSc, PHD, Researcher
எதிர்பார்ப்பு: உயர்பதவி
தொ.இ: B/15552

பிறப்பு: 1995 இந்து
நட்சத்திரம்:உத்தராடம்
12 இல் சூரி செவ்
கி.பா:11
உயரம்:5'7"
தகைமை:தொழில்: BBM, MA
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/15554

இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1996 இந்து
நட்சத்திரம்: கார்த்திகை
கி.பா:10 1/4
உயரம்: 5'5"
தகைமை/தொழில்:Accountant(GERMAN)
எதிர்பார்ப்பு:German, Swiss
தொ.இ: G/15557

பிறப்பு: 1972 இந்து
நட்சத்திரம்: சித்திரை
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: A/L
எதிர்பார்ப்பு: விவாகரத்தானவர்
தொ.இ: G/15561

பிறப்பு: 1995 இந்து
நட்சத்திரம்: பரணி
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: Account Course
எதிர்பார்ப்பு: வெளிநாடு,தொழில்
தொ.இ: G/15565

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி
1 இல் செவ்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: BSc, Nurse
எதிர்பார்ப்பு: விவாகரத்தானவர்
தொ.இ: G/15568

பிறப்பு: 1996 இந்து
நட்சத்திரம்: மூலம்
கி.பா:52 1/4
1 இல் செவ்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: BCom, MBA
எதிர்பார்ப்பு: படித்த பெண்
தொ.இ: G/15570

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


## இன்று ஒரு தகவல் 413



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## பிறர் மேல் பழி

இந்த உலகத்தில் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமான ஆசை.

ஒரு ராஜாவுக்கு ஒரு விநோதமான ஆசை. அது என்ன? என்றால், விதம் விதமான விசிறி மட்டைகளை வாங்கி சேகரித்து வைக்க வேண்டும் என்பது அவருடைய ஆசை.

இப்படி எங்கே போனாலும் விசிறி மட்டைகளையே வாங்கிவந்து சேர்த்து வைத்துக் கொண்டிருந்தார். ஒருநாள் தெருவழியாக ஒருத்தன் விசிறி மட்டை விற்றுக்கொண்டுப் போய்க்கொண்டிருந்தான். இவர் பார்த்து விட்டார். சும்மா இருப்பாரா? உடனே அந்த நபரை அரண்மனைக்கு அழைத்து வரச் சொன்னார். விசிறி விற்கிறவனும் வந்தான்.

"உன்னிடம் விசேடமான விசிறி மட்டை ஏதாவது இருக்கின்றதா? அப்படி இருந்தால் கொடு!" என்றார்.

"அரசே! என்னிடம் இருக்கின்ற விசிறி மட்டை எல்லாமே ரொம்ப விசேடமானதுதான். பார்ப்பதற்கு மிகவும் சாதாரணமாகத்தான் தெரியும். இருந்தாலும் இதனுடைய தரம் மிகவும் உயர்வு. அதனாலே ஒரு விசிறி மட்டையினுடைய விலை நூறு ரூபாய்!" என்றான் அந்த நபர். ராஜாவுக்கு ஆச்சரியம்.

"என்னப்பா இது. பார்த்தால் பத்து காசு கூட போகாது போல இருக்கின்றது. இதற்குப் போய் நூறு ரூபாய் விலை சொல்கின்றாயே. அப்படி என்ன விசேடம் இதிலே?" என்றார்.

"மன்னா.. உங்களிடம் பொய் சொல்லி நான் ஏமாற்ற முடியுமா? எனக்கு ஏது அவ்வளவு தைரியம்? இந்த விசிறி மட்டையிலே உள்ள விசேடம் என்ன என்றால் இது நூறு வருடம் உழைக்கும். அதற்கு நான் உத்தரவாதம் கொடுக்கின்றேன்!" என்றான்.

அப்படி என்றால் அந்த விசிறியை வாங்குங்கள் என்று உத்தரவு போட்டார் ராஜா. அரண்மனையிலே அதை நூறு ரூபாய் கொடுத்து வாங்கிக் கொண்டார்கள்.

இருந்தாலும் ராஜாவுக்கு மனதிற்குள்ளே ஒரு சந்தேகம். கொஞ்சம் யோசித்தார். அதன் பின்பு அந்த நபரைப்பார்த்து இதோ பாரு இன்றையிலிருந்து இந்த விசிறிமட்டையை நான் உபயோகப்படுத்தப்போகின்றேன். நீ எதற்கும் ஒரு வாரம் கழித்து என்னை வந்து பார்க்க வேண்டும்!" என்றார். சரி என்று ஒத்துக்கொண்டான் இவன்.

ராஜா அந்த விசிறி மட்டையை எடுத்து தினமும் விசிறிக்கொண்டே வந்தார். மூன்று நாளிலே அந்த விசிறியோட நடுக்குச்சி வெளியே வந்து விட்டது. அடுத்த மூன்று நாளிலே மிகுதி விசிறி மட்டையும் வீணாகப் போய்விட்டது!

"ஆகா. ஏமாந்து விட்டோம். அந்த நபர் இனிமேல் அரண்மனை பக்கம் வரமாட்டான்!" என்று நினைத்தார் ராஜா. ஆனால் அந்த நபர் சொன்னபடி சரியாக ஒரு வாரத்திலே திரும்பி வந்தான்.

ராஜாவைப் பார்த்தான். அவர் கோபமாக இவனைப் பார்த்தார்.

"என்ன என்னிடமே விளையாடுகின்றாயா? உன்னோட விசிறிமட்டை நூறுவருடம் உழைக்கும் என்று சொன்னாய் ஒரு வாரத்திற்குள்ளே ஒன்றுமில்லாமல் போய் விட்டுது! ராஜாவை ஏமாற்றினால் என்ன தண்டனை தெரியுமா?" என்றார்.

"அரசே! அப்படி நினைக்காதீர்கள். நான் ஒன்றும் தப்பு செய்யவில்லை.. மன்னருக்கு விசிறி மட்டையை உபயோகிக்கிறது எப்படி என்று தெரியாது போல இருக்கின்றது! முறையாகவும் சரியாகவும் உபயோகப்படுத்தினால் இது நூறு வருடம் கண்டிப்பாக உழைக்கும்!" என்றான்.

"எனக்கு என்ன? விசிறவும் தெரியாது என்னு சொல்கின்றாயா" என்று கேட்டார் வேகமாக!

"தயவுசெய்து நீங்கள் எப்படி விசிறினீர்கள் என்று சொல்லுங்கள்" - என்று கேட்டான் இவன்.

"இப்படித்தான் விசிறிக்கொண்டேன்" என்று எல்லாரும் விசிறுவது மாதிரி விசிறி மட்டையை எடுத்து விசிறிக் காட்டினார் ராஜா அந்த நபர் பார்த்தான்.

"சரி தான். இப்போது எனக்குப் புரிந்துவிட்டது. என்ன தப்பு நடந்தது என்பது. இந்த விசிறி மட்டையை நீங்கள் உபயோகப்படுத்த வேண்டிய முறையே வேறு!" என்றான்

எப்படி உபயோகப்படுத்த வேண்டும்? என்று ஆர்வமாக கேட்டார் ராஜா. அந்த ஆள் அதை விளக்க ஆரம்பித்தான். "விசிறி மட்டையை எடுத்து நமது முகத்துக்கு முன்னாடி ஒரு கையிலே அசையாமல் பிடித்து வைக்க வேண்டும். நமது தலையை மட்டும் அப்படியும் இப்படியும் ஆட்ட வேண்டும். விசிறி மட்டையை ஆட்டக்கூடாது!"

நீங்கள் விசிறியை ஆட்டியிருக்கின்றீர்கள். அதுதான் வீணாகப் போய்விட்டது. அதனாலே தப்பு என் விசிறி பேரில் இல்லை. உங்கள் பேரில் தான் தப்பு!" என்றான்.

இன்றைக்கு உலகம் இப்படித்தான் போய்க்கொண்டிருக்கின்றது.

நாம் செய்கின்ற தப்புக்கு அடுத்தவர்கள் பேரிலே பழியைப் போடுகின்றோம். தவறுகளை நியாயப்படுத்த ஆரம்பிக்கிறோம்.

ஒருத்தன் அப்படித்தான். புதிதாக ஒரு கார் வாங்கினான். ஓட்ட கற்றுக்கொண்டான். ஒரு புளிய மரத்திலே கொண்டு போய் மோதிவிட்டான்.

"என்னடா இப்படி செய்து விட்டாயே?" என்று கேட்டா "என் மேலே தப்பு இல்லை. நான் நேராகத்தான் வந்துக்கொண்டிருந்தேன். எல்லோரும் விலகினார்கள். இந்தப் புளிய மரம் மட்டும் விலகவில்லை. அதனாலே தான் இப்படி ஆகிவிட்டது என்றான்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரையறுக்கப்பட்ட பச்சிலைப்பள்ளி பலநோக்கு கூட்டுறவுச்சங்கம் (வ.து)

பதிவு இலக்கமும் பதிவு திகதியும்:-PA/44,1971.01.29

# அறிவித்தல்

## கிளைக்குழு உறுப்பினர் தெரிவு தொடர்பானது-19.07.2025

வடக்கு கிழக்கு மாகாணக் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும், கூட்டுறவு சங்கங்களின் பதிவாளரும் அவர்களினால் ஆக்கப்பட்டு 1998-05-19 ஆம் திகதிய 1028/6 இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான "வடக்கு கிழக்கு மாகாண நிர்வாக எல்லைக்கு உட்பட்ட பகுதியில் இயங்கிவரும் வரையறுக்கப்பட்ட பலநோக்கு கூட்டுறவுச்சங்கங்களின் கிளைக்குழுக்களை தெரிவு செய்வதற்காக ஆக்கப்பட்ட விதிகளுக்கு அமைய கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் கூட்டுறவுச் சங்க பதிவாளரும் ஆகிய திரு.நடராசா திருலிங்கநாதன் ஆகிய நான் 2024.05.17 ஆம் திகதிய 2385 ஆம் இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானி மூலம் என்மீது பாரிக்கப்பட்ட அதிகாரங்களின் படி மேற்படி சங்கத்தின் துணைவிதி 23 இதற்கமைய சங்கத்தின் சகல கிளைகளினதும் கிளைக்குழு தெரிவிற்கான கிளைப்பொதுச்சபை கூட்டங்களை பின்வரும் கால அட்டவணையின்படி நடாத்துவதற்கு அந்த கூட்டங்களை அழைப்பதற்கும் அவற்றின் தவிசாளராக கடமையாற்றுவதற்கும் கீழ்வரும் அலுவலர்களை பெயர் குறித்து தவிசாளராக நியமித்துள்ளேன்.

- இதற்கமைய இக் கூட்டங்களிற் சமூகமளித்து வாக்களிக்க தகைமையுள்ள உறுப்பினர்களுக்கு தனித்தனி அறிவித்தல்கள் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.
- கிளைப்பொதுச்சபைக் கூட்டத்திற்கான நிறைவெண் கூட்டத்திற்கு சமூகமளித்து வாக்களிக்க தகைமையுள்ள உறுப்பினர்களின் 1/4 பங்கினர் அல்லது 25 பேர் அதில் எது குறைவோ அத் தொகையாகும்.
- தவிசாளர் குறித்த கிளையின் பொதுச்சபையில் இருந்து கிளைக்குழுவுக்கான ஒன்பது (09) உறுப்பினர்களை தெரிவு செய்யும் படி கிளையின் பொதுச்சபையை கோருவார். இவர்களுள் குறைந்தது இருவராவது (02) 18-35 வயதிற்கு இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும்.
- சபையில் இருந் து கிடைக்கப்பெறும் முன்மொழிவுகள் ஒன்பது பேருக்கு மேற்படின் தவிசாளர் இரகசிய வாக்கெடுப்பின் மூலம் தெரிவினை மேற்கொள்வார்.
- இரண்டு வேட்பாளர்கள் அல்லது இரண்டுக்கு மேற்பட்ட வேட்பாளர்களுக்கிடையே சமவாக்குகள் கிடைக்கப் பெறும் பட்சத்தில் திருவுளச்சீட்டு மூலம் தெரிவு மேற்கொள்ளப்படும்.
- தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர்களைத் தவிசாளர் கிளையின் பொதுச்சபையிற் பிரகடனப்படுத்துவதுடன் சங்க செயலாளருக்கும் எனக்கும் எழுத்து மூலம் அறிவிப்பார்.
- கிளைப்பொதுச்சபைக் கூட்டத்திற்கு வாக்களிக்கத் தகுதியுடைய உறுப்பினர்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலரால் 19.05.1998 ஆம் திகதிய 1028/06 இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலுக்கமைய கூட்ட அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது. அறிவித்தல் கிடைக்காத வாக்களிக்க தகுதியுடைய அங்கத்தவர்களும் இவ்வறிவித்தலை தனிப்பட்ட அறிவித்தலாக கருதி அன்றைய கூட்டத்திற்கு சமூகமளித்துத் தங்கள் ஜனநாயக உரிமையை பயன்படுத்தி கூட்டுறவு அமைப்பினை ஜனநாயக ஆளுமை கொண்டதாக செயற்படுத்துமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

### கிளைப் பொதுச்சபைக்கூட்டங்கள் தொடர்பான விபரங்கள்

கிளை பொதுச்சபைக் கூட்டங்கள் நடைபெறும் காலம்:- 19.07.2025 ஆம் திகதி சனிக்கிழமை மு.ப 10.00 மணி

| தொ.இல | கிளை இல | கிளையின்பெயர் | தவிசாளர் பெயர் | கூட்டம் நடைபெறும் இடம் |
|---|---|---|---|---|
| 1 | 1 | பளை | திருமதி.செ.இந்திரவதனா | கிளி/பளைமத்தியகல்லூரி |
| 2 | 2 | மாசார் | திரு.சோ.கிருஸ்ணகுமார் | கிளி/மாசார் அ.த.க.பாடசாலை |
| 3 | 3 | முள்ளிப்பற்று | திருமதி.ற.சிவகௌரி | கிளி/இயக்கச்சி அ.த.க.பாடசாலை |
| 4 | 4 | சோரன்பற்று | திரு.வி.முகுந்தன் | கிளி/சோரன்பற்று கணேசா வித்தியாலயம் |
| 5 | 5 | புலோப்பளை | திருமதி.பி.கவிதா ஜோறன்சியா | புலோப்பளை பொதுநோக்கு மண்டபம் |
| 6 | 6 | இத்தாவில் | திரு.பா.வாகீசன் | கிளி/வேம்பொடுகேணி சி.சி.த.க.பாடசாலை |
| 7 | 7 | முகமாலை | திரு.உ.ஜெயந்தபிரகாஸ் | கிளி/முகமாலை றோ.க.த.க.பாடசாலை |
| 8 | 9 | கிளாலி | திரு.க.செல்வகுமார் | கிளி/கிளாலி றோ.க.த.க.பாடசாலை |
| 9 | 10 | புலோப்பளை கிழக்கு | திரு.ம.லெட்டினன் | கிளி/புலோப்பளை றோ.க.த.க.பாடசாலை |
| 10 | 11 | அல்லிப்பளை | திரு.ஜெ.அஞ்ஜீவ் | கிளி/அல்லிப்பளை சி.சி.த.க.பாடசாலை |
| 11 | 12 | கச்சார்வெளி | திரு. ப றொய்டனிஸ்ரன் | கச்சார்வெளி பொதுநோக்கு மண்டபம் |
| 12 | 13 | தம்பகாமம் | திரு.செ.ஜெயராசா | கிளி/ பளை இந்து ஆரம்ப வித்தியாலயம் |
| 13 | 14 | சங்கத்தார்வயல் | திரு.இ.ஜெகதீபன் | கிளி/கோயில்வயல் சி.சி.த.க.பாடசாலை |

ஒப்பம்:- திரு.நடராசா திருலிங்கநாதன்
கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரும் (வடமாகாணம்)

கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர்
அலுவலகம், திகதி 2025.07.11

### கிளைக்குழு உறுப்பினராகத் தெரிவு செய்யத் தகுதியற்றவர்கள்.

அ) 18 வயதுக்கு கீழ்ப்பட்டவர்.

ஆ) உடன் முன்சென்ற 3 ஆண்டுகளுக்குள் தீய ஒழுக்க செயலுக்காக குற்றவாளி எனத் தீர்ப்பளிக்கப்பட்டவர் அல்லது மூன்று மாதங்களுக்கு மேற்பட்ட சிறைத் தண்டனைகளுக்குத் தீர்ப்பளிக்கப்பட்டவர்.

இ) கடனைத் தீர்க்க வகையற்றவரெனப் பிரகடனஞ் செய்யப்பட்டவர். அல்லது அவ்வாறு ஒரு வழக்கில் தீர்ப்பளிக்கப்பட்டவர்.

ஈ) இச் சங்கத்திற்கு அல்லது பதியப்பட்ட வேறு எக் கூட்டுறவுச் சங்கத்திற்கு எக்கடனையாவது திருப்பிக் கொடுக்காதவர் அல்லது வேறு எவ்விதத்திலும் தவறு செய்தவர்.

உ) இச்சங்கத்தில் வியாபாரி எனப் பதியப்பட்டவர் அல்லது சங்கத்தின் நலவுரிமைகளுக்கு முரண்பட்ட முறையில் ஒரு வியாபாரத்தினை நடத்துபவர்.

ஊ) சங்கத்தில் ஆதாயம் தரும் ஏதாவது ஒரு பதவியை அல்லது இடத்தினை வகிப்பவர் அல்லது ஆணையாளரின் முன் அனுமதி இன்றி ஏதாவது மதிப்பூதியம் பெறுபவர்.

எ) இச்சங்கத்தில் அல்லது இச்சங்கம் உறுப்புரிமை வகிக்கும் வேறு எச்சங்கத்தின் ஊதியம் பெறும் ஊழியராய் இருப்பவர்.

ஏ) ஓர் உறுப்பினர் என்ற முறையில் தவிர மற்றப்படி சங்கத்துடன் செய்யப்பட்டிருக்கும் எந்த ஒப்பந்தத்திலோ அல்லது சங்கத்தினால் செய்யப்படும் எந்த விற்பனையிலோ கொள்வனவிலோ அல்லது சங்கத்தின் நிதியோடு சம்மந்தப்பட்டு அதனால் செய்யப்படவிருக்கும் அல்லது பேரப்பேச்சளவில் இருக்கும் ஏதாவது ஒப்பந்தத்தில் அல்லது கொடுக்கல் வாங்கலில் மறை முகமாகவோ நேர்முகமாகவோ அக்கறை கொண்டு இருப்பவர்.

ஐ) கூட்டுறவுச் சட்டத்தின்படி இயற்றப்பட்ட விதிகளுக்கமைய தனது பதவியை அல்லது வேலையை கடந்த ஐந்து ஆண்டுகளுக்குள் விட்டகல வேண்டிய நிலைக்குள் ஆளானவர்.

ஒ) சங்கத்தில் தனது அரிசி பங்கீட்டு புத்தகம். அல்லது பங்கீட்டு அட்டை இணைக்கப்படாத ஒருவர்.

ஓ) கிளைக்குழுவினால் உறுப்பினர் அனுமதிக்காத ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளப்படாத ஒருவர்.

ஔ) பாராளுமன்ற உறுப்பினர்கள். மாகாண சபை உறுப்பினர். மாநகர சபை உறுப்பினர்கள். நகரசபை உறுப்பினர்கள். பிரதேச சபை உறுப்பினர்கள்.

ஃ) 06 - 03 - 92 இன் பின் அங்கத்தவராகச் சேர்ந்து ரூபா 100.00 ஐ பங்குப்பணமாகச் செலுத்தி முடிக்காதவரும் அங்கத்தவராக சேர்ந்து ஒருவருடம் பூர்த்தியாகாத வருமான ஒருவர்.

(சங்கத்தின் துணைவிதி பிரிவு 22 (1) இற்கமைவானது) (சி-3405)

# இந்தியாவுடனான ஒப்பந்தங்களை வெளிப்படுத்தாவிட்டால் போராட்டம்

## விமல் வீரவன்ச எச்சரிக்கை

(கொழும்பு)

இந்தியாவுடன் கைச்சாத்திடப்பட்ட 7 ஒப்பந்தங்களால் இலங்கைக்கு ஏதேனும் பாதிப்பு இல்லையாயின் ஏன் அவற்றை இரகசியமாக பேண வேண்டும். கைச்சாத்திட்ட ஒப்பந்தங்களை அரசாங்கம் உடன் வெளிப்படுத்த வேண்டும் இல்லையேல் அரசாங்கத்துக்கு எதிராக மக்களை ஒன்றுதிரட்டி போராடுவோமென தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ச தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது, மக்களாணைக்கு முரணாக அரசாங்கம் திருட்டுத்தனமான முறையில் 2025.04.05 ஆம் திகதி 7 புரிந்துணர்வு ஒப்பந்தங்களைச் கைச்சாத்திட்டுள்ளது.

ஒப்பந்தங்கள் கைச்சாத்திட்டு 3 மாதங்கள் கடந்துள்ள நிலையிலும் குறித்த ஒப்பந்தங்கள் நாட்டு மக்களுக்கு பகிரங்கப்படுத்தப்படவில்லை.

1987ஆம் ஆண்டு அப்போதைய ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்தனவுக்கு இந்தியா கடும் அழுத்தம் பிரயோகித்தது. இதன் விளைவாகவே இலங்கை - இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. இதன் விளைவாகவே அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டம் கைச்சாத்திடப்பட்டது.

2008 ஆம் ஆண்டு இந்தியாவின் முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங் இலங்கைக்கு விஜயம் செய்திருந்த போது சிபா ஒப்பந்தத்தை கைச்சாத்திடுவதற்கு முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு கடும் அழுத்தம் பிரயோகித்தார். அரசியல் தரப்பினர் மற்றும் சிவில் தரப்பினரின் கடும் எதிர்ப்பை தொடர்ந்து இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்படவில்லை.

இலங்கைக்கு அழுத்தம் பிரயோகித்தே இந்தியா வரலாற்று காலம் முதல் பல ஒப்பந்தங்களை கைச்சாத்திட்டுள்ளது. இந்திய பிரதமர் அண்மையில் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருந்த போது 7 ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டன.

இந்த ஒப்பந்தங்கள் இது வரையில் பாராளுமன்றத்துக்கும், நாட்டு மக்களுக்கும் இது வரையில் வெளிப்படுத்தப்படவில்லை. இந்த ஒப்பந்தத்தால் இலங்கைக்கு ஏதேனும் பாதிப்பு இல்லையாயின் ஏன் ஒப்பந்தங்களை இரகசியமாக பேண வேண்டும்.

இந்தியாவுடன் கைச்சாத்திட்ட ஒப்பந்தங்களை அரசாங்கம் உடன் வெளிப்படுத்த வேண்டும் இல்லையேல் அரசாங்கத்துக்கு எதிராக மக்களை ஒன்றுத்திரட்டுவோம்.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை காட்டிலும் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க இந்தியாவுடன் நெருக்கமாகவுள்ளார். முன்வைக்கும் சகல ஒப்பந்தங்களுக்கும் முழுமையாக இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்தார். (நி)

# முன்னாள் அமைச்சர் ராஜித தலைமறைவு

## தொலைபேசியும் செயலிழப்பு

(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்னவின் கைத்தொலைபேசி 15 நாட்களாக செயல் இழந்துள்ளதாக இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

கிரிந்த மீன்பிடித் துறைமுகத்தில் மணல் அகழ்வதற்கு தனியார் நிறுவனமொன்றுக்கு குத்தகை வழங்கி அரசாங்கத்துக்கு இரண்டு கோடி ரூபாயிற்கும் அதிகமான நட்டத்தை ஏற்படுத்தியதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பில் சந்தேக நபராக பெயரிடப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன ஜூன் மாதம் 26 ஆம் திகதி முதல் தாம் வசித்த வீட்டை விட்டுச் சென்றுள்ளதாக இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றுக்கு அறிவித்தது.

சந்தேகநபரான முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்னவுக்கு இலஞ்ச ஊழல்விசாரணை ஆணைக்குழுவில் முன்னிலையாகி வாக்கு மூலம் வழங்குமாறு அழைப்பு விடுக்கப்பட்டிருந்த போதும் உடல் நிலை பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்து அதனைத் தொடர்ச்சியாக தவிர்த்து வந்ததாக ஆணைக்குழு நீதிமன்றுக்கு அறிவித்தது. மேலும் 15 நாட்களாக சந்தேகநபரின் கைத்தொலைபேசியும் செயல் இழந்துள்ளதாக ஆணைக்குழு தெரிவித்தது. (நி)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 4

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 820





பெண்கள் எல்லாருமே சென்ற பிறகு, கரிகாலன் அந்த மேல் மாடத்தின் முகப்புக்குச் சென்று நின்றான். வாசலில் அப்போது தான் கலையத் தொடங்கியிருந்த ஜனக் கூட்டதினிடையே மறுபடியும் பேராரவாரம் எழுந்தது. ஜனங்கள் திரும்பிக் கோட்டை வாசலண்டை வரத் தொடங்கினார்கள்.

அந்த மேல் மாடத்தை யொட்டித் தனியாக நீண்டு அமைந்திருந்த மேடையில் கட்டியங் கூறுவோன் நிற்பதைக் கரிகாலன் கவனித்தான். அவனைச் சமிக்ஞையினால் அருகே வரும்படி அழைத்தான். வந்தவுடன் ஜனங்களுக்குச் சில விடயங்களை அறிவிக்கும்படி கூறினான். கட்டியங் கூறுவோன் திரும்பிச் சென்று பேரிகையைச் சில தடவை முழக்கினான். பின்னர், ஜனங்களைச் சமிக்ஞையினால் பேசாதிருக்கும்படி கேட்டுக் கொண்டான். ஆதித்த கரிகாலரின் விருதுகளில் சிலவற்றை விடுத்துச் சில வற்றை மீண்டும் கூறிவிட்டு, "அத்தகைய சோழர் குலக் கோமகனார் இந்தக் கடம்பூர் மாளிகையில் ஒரு வாரம் பத்து நாட்கள் வரை தங்கியிருப்பார். சுற்றுப்புறமுள்ள ஊர்களுக்கெல்லாம் விஜயம் செய்வார்.

அப்போது அந்தந்த ஊர் மக்களை நேரில் கண்டு அவரவர்களுடைய குறைகளையெல்லாம் கேட்டு அறிந்து கொள்வார்!" என்று கூவினான்.

அவ்வளவுதான்! இதுவரையில் அந்த ஜனக் கூட்டத்தில் எழுந்த ஆரவாரமெல்லாம் நிசப்தம் என்று சொல்லும்படியாக அவ்வளவு பெரிய பேரிரைச்சல் கிளம்பியது. குதூகலக் குரல்களும் வாழ்த்தொலிகளும் கரகோஷ ஓசையும் சேர்ந்து கலந்து எழுந்து சுற்றுப் பக்கம் வெகு தூரம் சென்று வீர நாராயண ஏரியிலிருந்து எழுபத்து நாலு கண்மாய்களின் வழியாகப் பாய்ந்த தண்ணீர் வெள்ளத்தின் ஓசையையும் அமுங்கிவிடும்படி செய்தன.

சம்புவரையரும் பழுவேட்டரையரும் பார்த்திபேந்திரனும் அவர்கள் முன்னால் நின்ற இடத்திலேயே நின்று கொண்டிருந்தார்கள். ஆதித்த கரிகாலன் அவர்கள் நின்ற இடத்தை நெருங்கியதும், "பார்த்திபேந்திரா! ஏது நீ இங்கேயே நின்றுவிட்டாய்? இந்தக் கிழவர்களுடன் சேர்ந்து நீயும் சதியாலோசனை செய்யத் தொடங்கி விட்டாயா?" என்று கேட்டான்.

கிழவர்கள் இருவரும் திடுக்கிட்டுக் கரிகாலனுடைய முகத்தைப் பார்த்தார்கள். அவன் முகத்தில் புன்னகை தவழ்ந்து கொண்டிருந்தது.

சம்புவரையர் சிறிது சமாளித்துக் கொண்டு, "கோமகனே! சற்று முன் சிறை என்கிறீர்கள் இப்போது சதி என்கிறீர்கள். இந்தக் குடிசையில் தாங்கள் விருந்தாளியாகத் தங்கியிருக்கும் போது தங்களுக்கு அணுவளவேனும் தீங்கு நேராது என்று ஆணையிட்டுக் கூறுகிறேன். அவ்விதம் நேர்வதற்கு முன்னால் என் உடலிலிருந்து உயிர் பிரிந்து போயிருக்கும்!" என்றார்.

"ஐயா! எனக்குத் தீங்கு நேரும் என்று நான் அஞ்சுவதாக எண்ணினீர்களா? ஒரு லட்சம் பாண்டிய நாட்டுப் பகைவர்களின் மத்தியில் இருக்கும்போதே எனக்குத் தீங்கு நேரும் என்று நான் அஞ்சியதில்லை. என் அருமைச் சிநேகிதர்களின் மத்தியில் இருக்கும்போது அஞ்சுவானேன்? ஆனால் தங்களுடைய இந்த மாளிகையைக் குடிசை என்று மட்டும் கூற வேண்டாம் ஆகா! இதைச் சுற்றியுள்ள மதில் சுவர்கள் எவ்வளவு உயரம்? எவ்வளவு கனம்? தஞ்சாவூர்க் கோட்டை மதிலை விடப் பெரியதாக அல்லவா இருக்கிறது?

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## முனியாண்டியின் மூளை



அதுபோக எங்கள் ஏரியாவில் இருந்து ஒரு அக்காவும் அந்த பங்களாவுக்கு பாத்திரம் கழுவி கொடுக்கும் வேலைக்கு சென்று வருகிறாள். அதனால் நாளை காலையில் என்ன விடயம் என்று கேட்டு சொல்கிறேன் என்றான்.

மறுநாள் ஆரோக்கியம் சொன்ன செய்தி முனியாண்டிக்கு அதிர்ச்சியாக இருந்தது. சேட்டு வீட்டில் விலையுயர்ந்த வெள்ளி தட்டும், டம்ளரும் காணாமல் போய் விட்டது.

அவர்கள் பொலீஸில் புகார் கொடுக்கவில்லை. ஆனால் அந்த பங்களாவில் வேலை செய்து கொண்டிருக்கும் அனைவரையும் கூப்பிட்டு இன்னும் ஒரு வாரத்தில் அந்த பொருள் திரும்பி வந்தாகனும், அப்படி வரவில்லை என்றால் பொலிஸ் கம்ளெயின்ட் கொடுத்து விடுவேன்.

அவர்கள் எல்லாத்தையும் பிடிச்சு விசாரிக்க ஆரம்பிச்சா உங்களுக்குத்தான் அவமானம் என்று சொல்லி விட்டார்கள்.

இதில காத்தமுத்துவும் அடக்கம். அதனால தான் அவரால இரண்டு நாட்களாக வீட்டில நிம்மதியா இருக்க முடியவில்லை. முனியாண்டிக்கு மனசுக்குள் திடீர் என்று ஒரு தைரியம், அப்பாவிடம் போனான், அப்பா உனக்கு என்ன பிரச்சினை என்று தெரிந்து போய்விட்டது. நான் வேணும் என்றால் இன்றைக்கு உன்னுடன் காவல் காக்க துணைக்கு வருகின்றேன், அங்கே சேட்டு ஐயா இருந்தா அவரிடம் பேசுகிறேன்.

மகனை அன்புடன் பார்த்த காத்தமுத்து, வேண்டாம் அங்கெல்லாம் நீ வரக்கூடாது, முதலாளி ஒத்துக் கொள்ள மாட்டார். என்று சொன்னான் அதெல்லாம் முடியாது. இன்றைக்கு நான் உன்னுடன் வரத்தான் போகிறேன்.

பிடிவாதம் பிடிக்கவும், முனியாண்டியின் அம்மா, அவனையும் தான் அட கூட்டிக் கொண்டு போங்களேன். வேறு வழியில்லாமல் அன்று இரவு முனியாண்டியையும் கூட்டி சென்றான்.

இரவு காவல் வேலையை எடுக்கப் போகும் முன் தன் மகனையும் சேட்டு விடம் கூட்டி சென்றான். பங்களாவுக்குள் நுழைந்தவுடன் ரோஜாப்பூவின் வாசனை அப்படியே மனசை மயக்கியது.

அப்பாவிடம் அது என்னப்பா இப்படி ஒரு வாசனை என்று கேட்டான். அது ஒரு செண்ட் எப்பொழுதும் வேலையாள் பங்களாவை கூட்டி துடைத்து அந்த செண்டை தெளித்து விடுவார்கள். காலையிலும், மாலையிலும் இப்படி செய்வார்கள் என்று சொன்னார். பங்களாவுக்குள் சேட்டு உட்கார்ந்திருந்தார்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாய் சொல்லித் தப்பிக்க நினைக்காதே. உண்மையைச் சொல்லி மாட்டிக்கொள். ஏனென்றால் வாய் வாழவிடாது. உண்மை சாகவிடாது. – விவேகானந்தர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## மாளயம் செய்வதுபோல போட்டிகளை நடத்தாதீர்கள்

வடக்கு மாகாணத்தின் கல்வி நிலை குறித்து பல்வேறு விமர்சனங்கள் சமூக வலைத்தளங்களில் வந்தவண்ணமுள்ளன.

குற்றம் யார் பக்கம் என்பதற்கு அப்பால், வருமுன்னர் காவாதான் வாழ்க்கை எரி முன்னர் வைத்தூறு போலக் கெடும்

என்ற திருக்குறளைச் சுட்டிக்காட்டி அந்த விடயத்துக்கு அப்பால் செல்லலாம்.

பொதுவில் எந்த நிகழ்வாயினும் அந்த நிகழ்வு தரமானதாகவும் தகைமையுள்ளதாகவும் நடத்தப்பட வேண்டும்.

அப்போதுதான் அஃது பெறுமதி உடையதாக அமையும்.

அந்த வகையில், வடக்கு மாகாணத்தைப் பொறுத்தவரை மாணவர்களிடையே நடத்தப்படுகின்ற போட்டிகள் தொடர்பில் காலத்துக்குக் காலம் விமர்சனங்களும் குற்றச்சாட்டுக்களும் எழுந்தவண்ணமுள்ளன.

அதிலும் வருடந்தோறும் நடக்கின்ற தமிழ்த் தினப் போட்டிகளின் போது முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்கள் கொஞ்சமல்ல.

அதிபர், ஆசிரியர், பெற்றோர், மாணவர்கள் என்ற தரப்பால் முன்வைக்கப்படுகின்ற குற்றச்சாட்டுக்களும் போட்டி முடிவுகள் தொடர்பில் பாடசாலைகள் முன்வைக்கின்ற முறைப்பாடுகளும் இன்னமும் குறைந்தபாடில்லை.

இதற்கு மூலகாரணம், தமிழ்த்தினப் போட்டியை ஏதோ கீரிமலைக் கடலில் பிதிர்க்கடன் செய்வதுபோல அல்லது ஒவ்வொரு வருடமும் புரட்டாதி மாதத்தில் மாளயம் செய்வதுபோல நடத்துவதாகும்.

ஆம், இங்கு போட்டியைப் போட்டியாக நடத்துவதில்லை.

அதேவேளை, தமிழ்த்தினப் போட்டி என்றதும் மாணவர்கள், பெற்றோர்கள் கூடவே பாடசாலைச் சமூகத்தினர் கடும் பிரயத்தனங்கள் மத்தியில் போட்டிக்கான தயார்படுத்தலில் ஈடுபடுவர்.

அதேசமயம் போட்டிக்கான சுற்றுநிருபங்கள் மிகத் தெளிவாக அச்சிடப்பட்டுள்ளன.

ஆனால், போட்டிக்கு நடுவர்களை நியமிக்கும்போது, குறித்த போட்டிக்கு வந்திருக்கக் கூடியவர்களில் நடுவர்களைத் தேடிப் பிடிக்கின்ற வழமை தொன்று தொட்டு வருகிறது.

இதனால் சுற்றுநிருபம் பற்றி எதுவும் தெரியாத நடுவர்கள் தீர்ப்பை வழங்கும்போது, அவை விமர்சனத்துக்கும் முறைப்பாட்டுக்கும் வழிவகுக்கின்றன.

அதேவேளை போட்டி நியந்தனைகள் பற்றி எதுவும் அறியாதவர்களை நடுவர்களாக்கி விட, அவர்கள் வழங்குகின்ற தீர்ப்புகள்; நம்பிக்கையோடு போட்டியில் பங்கேற்ற மாணவர்களின் மனங்களை சிதைத்து விடுகின்றன.

எனவே இனிமேலேனும் தமிழ்த்தினப் போட்டியை போட்டியாக நடத்துங்கள். அதனை ஒரு கடன் கழிப்பாக நடத்தாதீர்கள்.

முன்கூட்டியே நடுவர்களை இனங்காணுங்கள். அவர்களை அழைத்துக் கலந்துரையாடுங்கள். சுற்றுநிருபத்தை அவர்கள் படிப்பதற்கு ஏற்பாடு செய்யுங்கள்.

நடுவர்களால் வழங்கப்படும் தீர்ப்பு சரியானது என்று ஏனையவர்கள் ஏற்றுக் கொள்ளும்வகையில் அதனைத் தகைமையுள்ளதாகவும் தரமுள்ளதாகவும் ஆக்குங்கள்.

இதைப் பொறுப்பானவர்கள் செய்யும்போது, குற்றச்சாட்டுக்களும் முறைப்பாடுகளும் கணிசமாகக் குறைந்து போட்டியின் காத்திரம் மென்மேலும் உன்னதமாகும்.

# டிஜிட்டல் அடையாள அட்டைத் திட்டத்தை இந்தியாவுக்கு வழங்கக் கூடாது

## கடுப்படைகிறார் விமல் வீரவன்ச

ஆட்பதிவுத் திணைக்களம் 5 பில்லியன் ரூபாய் வரையில் செலவு செய்து டிஜிட்டல் அடையாள அட்டைத் திட்டத்தை நிறைவு செய்துள்ள நிலையில் அந்த முறைமையை புறக்கணித்து விட்டு முழுத் திட்டத்தையும் இந்தியாவுக்கு வழங்குவது முற்றிலும் முறையற்றது. முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை காட்டிலும் இந்த ஜனாதிபதி இந்தியாவுக்கு அடிபணிந்துள்ளார்.

இலங்கை மக்களின் தனிப்பட்ட தரவுக் கட்டமைப்பை இந்தியாவுக்கு தாரைவார்க்கும் அரசாங்கத்தின் முறைகேடான செயற்பாட்டை நாட்டு மக்கள் அனைவரும் கடுமையாக எதிர்க்க வேண்டும் எனத் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ச தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள தேசிய சுதந்திர முன்னணியின் காரியாலயத்தில் நேற்று (13) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

உலகில் தற்போது தரவுத் திருட்டு பிரதான மோசடியாகக் காணப்படுகிறது. ஆட்பதிவுத் திணைக்களம் சுமார் 5 பில்லியன் ரூபாய் வரையில் செலவு செய்து டிஜிட்டல் அடையாள அட்டைத் திட்டத்தை நிறைவு செய்துள்ள நிலையில், அந்த முறைமையைப் புறக்கணித்து விட்டு, முழுத் திட்டத்தையும் இந்தியாவுக்கு வழங்குவது முற்றிலும் முறையற்றது என்றார். (ந-7)

## ஒரே சீனக் கொள்கை அநுர அரசு ஆதரவு

சீனாவின் ஒரே சீனக் கொள்கையை ஆதரிப்பதாகத் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் தெரிவித்துள்ளது.

மலேசியத் தலைநகர் கோலாலம்பூரில் வெளிவிவகார அமைச்சர் விஜிதஹேரத் சீன வெளிவிவகார அமைச்சர் லாங்ஜீயைச் சந்தித்துக் கலந்துரையாடிய போதே ஒரே சீனக் கொள்கைக்கான ஆதரவை இலங்கை அரசாங்கம் சார்பில் வெளிப்படுத்தியுள்ளார்.

இச் சந்திப்பில் கருத்து வெளியிட்ட சீன வெளியுறவுத் துறை அமைச்சர், சீன - இலங்கைக் கடல்சார் ஒத்துழைப்பானது பரஸ்பர நன்மை பயக்கும் ஒன்று. அது மூன்றாம் தரப்பினரை இலக்காகக் கொண்டதல்ல. எனவே இதில் மூன்றாம் தரப்பு தலையிடக்கூடாது எனத் தெரிவித்தார்.

அத்துடன் பட்டுப் பாதைத் திட்டத்தில் இணைந்து செயற்படுவதற்கும் இணக்கப்பாடு எட்டப்பட்டது.

மேலும் இலங்கையில் சீனா முன்னெடுத்த கொழும்புத் துறைமுக நகரம் மற்றும் ஹம்பாந்தோட்டைத் துறைமுகம் போன்ற பாரிய திட்டங்கள் இரு நாடுகளுக்கும் நன்மை பயக்கும் வகையில் அமையும் என லாங்ஜீ தெரிவித்துள்ளார். (ந-7)

## வெளிநாட்டு சிகரெட் கொண்டு வந்தவர் கைது

(கொழும்பு)

வெளிநாட்டு சிகரெட்டுகளை இந்தியாவிலிருந்து கொண்டுவந்த இலங்கையர் ஒருவர் நேற்று காங்கேசன்துறை பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

இது குறித்து மேலும் தெரியவருகையில்,

குறித்த நபர் சட்டவிரோதமாக இந்தியாவில் இருந்து 700 சிகரெட்டுகளைக் கப்பல் மூலம் எடுத்து வந்துள்ளார். அவர் சுங்கத்துறை அதிகாரிகளது சோதனை முடிவடைந்த பின்னர் வெளியே வந்தவேளை யாழ்ப்பாணம் மாவட்ட போதைப் பொருள் தடுப்புப் பொலிஸாரால் சிகரெட்டுகளுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

விசாரணைகளின் பின்னர் அவரை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ந-7,104)

## போதை வஸ்துகளுடன் மூவர் பொலிஸாரால் கைது

நாட்டின் வெவ்வேறு பகுதிகளில் பொலிஸார் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் ஐஸ் மற்றும் ஹெரோயின் போதைப் பொருட்களுடன் சந்தேக நபர்கள் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அலுபோமுல்ல பொலிஸ் பிரிவின் மாலமுல்லப் பகுதியில் 25 கிராம் 200 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருளுடன் சந்தேக நபர் ஒருவரும் 10 கிராம் 300 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் இன்னொரு சந்தேகநபரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் கோனதுவ மற்றும் வஸ்கடுவ பகுதிகளைச் சேர்ந்த 39 மற்றும் 40 வயதுடையவர்கள் எனத் தெரியவந்துள்ளது.

அதேவேளை கல்கிஸைப் பொலிஸ் பிரிவின் இரத்மலானைப்பகுதியில் 11 கிராம் 790 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருள் மற்றும் போதைப்பொருள் விற்பனை மூலம் பெறப்பட்டதாகச் சந்தேகிக்கப்படும் 53 ஆயிரத்து 100 ரூபா பணத்தொகை என்பவற்றுடன் சந்தேகநபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் இரத்மலானைப் பகுதியைச் சேர்ந்த 40 வயதுடையவர் எனத் தெரியவந்துள்ளது.

இச் சம்பவங்கள் குறித்துப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ந-7)

## போலி அனுமதிப் பத்திரமூடாக மணல் கடத்தல் அம்பலம்

### இருவர் கைது; டிப்பர்களும் பறிமுதல்

போலி அனுமதிப்பத்திரங்களைத் தயாரித்து மணல் கடத்தலில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் இருவர் சாவகச்சேரி பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளதுடன் கடத்தலுக்குப் பயன்படுத்தப்பட்ட டிப்பர் வாகனங்களும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

சாவகச்சேரிப் பொலிஸார் யாழ்ப்பாணம் - கண்டி நெடுஞ்சாலையில் புத்தூர் சந்தியை அண்மித்த பகுதியில் நேற்று வீதிச் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

இதன் போது வீதியில் பயணித்த இரண்டு டிப்பர்களை வழி மறித்துச் சோதனைக்குட்படுத்திய போது வாகனத்தினுள் ஆற்று மணல் காணப்பட்டுள்ளது.

அது தொடர்பில் சாரதிகளிடம் விசாரணைகளை மேற்கொண்டவேளை மணல் எடுத்து செல்வதற்கு வழங்கப்பட்டதாக அனுமதிப் பத்திரம் ஒன்றினை சாரதிகள் பொலிஸாரிடம்கையளித்துள்ளனர்.

அவற்றினை பொலிஸார் சோதனை செய்த போது அவை போலியான அனுமதிப் பத்திரம் எனக் கண்டறியப்பட்டதையடுத்து மணல் கடத்திச் சென்ற குற்றச்சாட்டில் இரு சாரதிகளையும் கைது செய்தனர்.

அதேவேளை மணல் கடத்தலுக்குப் பயன்படுத்தப்பட்ட டிப்பர்களும் பறிமுதல் செய்யப்பட்டன.

கைது செய்யப்பட்ட இருவரிடமும் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வரும் பொலிஸார் இருவரையும் சாவகச்சேரி நீதவான் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர். (ந-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொசாட் 13

**சொக்கன்**

ஆனால் இப்படி ஸ்லோமோஷனில் ஒவ்வொருவராகச் சுட்டுக்கொண்டிருந்தால் ஒட்டுமொத்த யூதர்களையும் காலி செய்வதற்குப் பல வருடம் ஆகும். அது வரை யாரால் காத்திருக்கமுடியும்?

அடால்ஃப் ஐக்மெனுக்கு அவசரம். மிக விரைவில் யூதர்களை முடித்து விட்டு ஹிட்லர் கையால் மெடல் வாங்கவேண்டும் என்று துடித்துக் கொண்டிருந்தார் அவர்.

இதனால் குறைந்த நேரத்தில் அதிக யூதர்களைக் கொல்வது எப்படி என்று தீவிரமாக யோசிக்க ஆரம்பித்தார் ஐக்மென். அவருடைய குரூர மனத்தில் ஏகப்பட்ட புதிய உக்திகள் தோன்றின.

உடனடியாக ஹிட்லர் ஆட்சியின் கீழ் இருந்த ஒவ்வொரு தேசத்திலும் யூதக் கைதிகள் ஆயிரக்கணக்கில் ஒன்று திரட்டப்பட்டார்கள். அவர்களை ரயிலில் மாடுகளை அடைப்பது போல் திணித்து வைத்துச் சித்திரவதை காம்ப்களுக்குக் கொண்டு சென்றார்கள்.

கொடுமையான இந்தப் பயணத்திலேயே பல யூதர்கள் இறந்து போனார்கள். மிச்சமிருந்தவர்களுக்கு வெந்நீர் தொட்டிகள், விஷவாயு அறைகள், நெருப்புக் குளியல் என்று பல விதமான தண்டனைகள் காத்திருந்தன.

இப்படி அடால்ஃப் ஐக்மெனின் உத்தரவால் உயிர் இழந்த யூதர்களின் எண்ணிக்கை, ஐந்தாயிரம், பத் தாயிரம் இல்லை அரைக் கோடிக்கு மேல்!

லட்சக்கணக்கில அப்பாவி யூதர்களைக் கொல்லுறீங்களே, இதுபற்றி உங்களுக்குக் கவலையோ, வருத்தமோ, குற்றவுணர்ச்சியோ இல்லையா? யாரோ ஐக்மெனிடம் கேட்டார்கள், நாளைக்கு ஒரு வேளை ஹிட்லர் தோற்றுப் போய் விட்டார் இந்தக் கொலைக்கெல்லாம் நீங்கள் பதில் சொல்ல



வேண்டியிருக்குமே? அப்போ என்ன செய்வீங்க?

அடாஃப் ஐக்மென் அலட்டிக்கொள்ளாமல் சொன்னார். நூறுபேர் இறந்துபோனா அது சம்பவம் ஆனா லட்சம் பேர் இறந்தா வெறும் புள்ளிவிபரம் அவ்ளோ தான்!

ஹிட்லருக்கு இணையான ரத்த வேட்கை கொண்டவர் ஐக்மென். யூதர்களு டன் அவருக்குத் தனிப்பட்ட விரோதம் எதுவும் இல்லை. ஆனாலும் அவரது கண்ணசைவில் லட்சக்கணக்கான யூதர்கள் கொல்லப்பட்டார்கள்.

இதனால் போருக்குப்பிறகு உயிர் தப்பிய நாஜிக்களில் யூதர்களின் நம்பர் 1 விரோதி என்றால், அடால்ஃப் ஐக்மென் தான். அவருடைய கொலை வெறியுடன் ஒப்பிடும் போது மற்ற நாஜிக்களின் குற்றங்களெல்லாம் சாதாரண பிக்பாக் கெட், வழிப்பறி ரகத்தில் அடங்கிவிடும்.

ஆனால் ஹிட்லரின் வீழ்ச்சிக்குப்பிறகு ஐக்மென் எங்கே போனார் என்று யாருக்கும் தெரிந்திருக்கவில்லை. நாக்மின்களின் வேட்டையிலும் அவர் அகப்படவில்லை. எப்படியோ நழுவி விட்டார்.

இதனால் அடுத்த பல வருடங்களுக்கு எல்லோரும் ஐக்மெனைப் பற்றிக் கிட்டத்தட்ட மறந்தே போய் விட்டார்கள். இந்த நேரத்தில்தான் இப்படி ஒரு கடிதத்தின்மூலம் அழுக்குப்பன்றி வெளியே வந்தது.

உடனடியாக இஸ்ரேல் அரசாங்கம் உளவுத்துறை அடால்ஃப் ஐக்மென் ஃபைலைத் தூசு தட்டி எடுத்தது. அவரை என்ன செய்யலாம் என்று தீவிரமாக யோசிக்க ஆரம்பித்தார்கள்.

## ஆபரேஷன் ஐக்மென்

அவள் பெயர் சில்வியா. நல்ல அழகி. சில்வியாவை ஓர் இளைஞன் நோட்டம் விட்டுக் கொண்டிருந்தான் அவன் பெயர் க்ளாஸ்.

இத்தனை அழகான ஒரு பெண்ணைக் காதலிக்கிற பையன் என்ன செய்வான்? தன்னைப் பற்றியும் தன்னுடைய குடும்பத்தைப்பற்றியும் விதவிதமாக அவளிடம் அளந்துவிடுவான். நாங்க இப்படியாக்கும், அப்படியாக்கும் என்று பெருமை அடித்துக் கொண்டு அவளை ஈர்க்க முயற்சி செய்வான்.

க்ளாஸ் இதையெல்லாம் ரொம்பச் சிரத்தையாகச் செய்தான் அந்தக் காலத்தில் ஹிட்லர் படையில எங்க அப்பா பெரிய ஆள் தெரியுமா?

சில்வியாவுக்கு இதிலெல்லாம் அவ்வளவாக ஆர்வம் இல்லை, ஹிட்லரே போயாச்சு அப்புறம் என்ன பெரிய ஆள் சின்ன ஆள் என்று அலட்சியமாக இருந்து விட்டாள்.

ஆனால் சில்வியாவின் தந்தை லோதர் ஹெர் மன் இந்த விடயத்தைக் கேள்விப்பட்டபோது அவருக்கு லேசாகச் சந்தேகம் எழுந்தது. அந்தப் பையனுடைய முழுப் பெயர் என்ன? என்று விசாரித்தார்.

க்ளாஸ் ஐக்மென். அந்தப் பெயரைக் கேட்ட லோதருக்கு ஏதோ லேசாகப் பொறி தட்டியது. ஆனால் அது என்ன என்பது நிச்சயமாகத் தெரியவில்லை. அப்போதைக்கு அந்த விடயத்தை மறந்து விட்டார்.

ஹிட்லரின் சித்திரவதை காம்ப்களில் சிக்கிச் சிரமப்பட்டவர் லோதர் ஹெமன். அங்கே அனுபவித்த கொடுமைகளால் அவருக்குப் பார்வை பறிபோயிருந்தது.

அதனால்தான் க்ளாஸின் தந்தை ஒரு பழைய நாஜி என்பது தெரிந்ததும், லோதர் ஹெர்மன் அதைப் பற்றி ஆர்வமாக விசாரித்தார். ஆனால் அப்போதும் ஐக்மென் என்கிற பெயரை அவரால் சரியாக அடையாளம் கண்டுகொள்ள முடியவில்லை.

கொஞ்ச நாட்கள் கழித்து லோதர் ஹெர்மன் எதேச்சையாக ஒரு பத்திரிகைச் செய்தியைப் படித்தார். அதில் அடால்ஃப் ஐக்மென் அவருடைய ரத்த வெறியாட்டத்தைப்பற்றி விரிவாக எழுதியிருந்தார்கள். கூடவே இப்போது அடால்ஃப் ஐக்மென் எங்கேயோ மறைந்து வாழ்கிறார்என்றும்குறிப்பிட்டிருந்தார்கள்.

சட்டென்று லோதருக்கு க்ளாஸ் ஐக்மென் என்கிற பெயர் ஞாபகம் வந்தது அந்தப் பையனுக்கும் இந்த அடால்ஃப் ஐக்மென்க்கும் ஏதாவது சம்பந்தம் இருக்குமோ?

உடனடியாக லோதர் தன்னுடைய மகளை அழைத்தார் க்ளாஸ் என்று ஒரு பையன் உன் பின்னால் சுற்றிக் கொண்டு இருந்தானே ஞாபகம் இருக்கா?

ஆமா அவனுக்கு என்ன? அந்தப் பையனுடைய அப்பா பேர் என்ன? உனக்குத் தெரியுமா? சில்வியா கொஞ்சம் யோசித்து விட்டுச் சொன்னான் ரிகார் டோக்ளெமென்ட். லோதர் ஹெர்மன் புன்னகைத்துக் கொண்டார். இது நிச்சயமாகப் பொய்ப் பெயர்தான்!

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ராஜபக்ஷக்கள்...

குப் பின்னால் உள்ள ராஜபக்ஷக்கள் மீது இதுவரை எந்த நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை என தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் குற்றம் சுமத்தியுள்ளார்.

கொட்டக்கலையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்துரைத்த அவர் மேலும் தெரிவித்ததாவது,

இன அழிப்பு மற்றும் போர்க்குற்றங்களைச் செய்த இராணுவத் தளபதிகள் மீதோ அல்லது அதனை மேற்கொண்ட அரசுகள் மீதோ எந்த விசாரணையும் மேற்கொள்ளப்படவில்லை.

இந்நிலையில் தமிழ்த் தரப்பை குற்றவாளியாகக் காண்பிக்கும் முயற்சி இடம்பெறுகின்றது. இது தொடர்பில் நாம் கூடுதல் அவதானத்துடன் இருக்க வேண்டும்.

மேலும், மலையக மக்கள் 200 வருடங்களுக்கு மேலாக இம்மண்ணில் வாழ்கின்றனர். நபரொருவர், பிரிட்டனுக்கோ அல்லது கனடாவுக்கோ சென்றால் அங்கு 3 அல்லது 5 வருடங்களில் குடியுரிமை கிடைக்கின்றது. வீடு வழங்கப்படுகின்றது. உழைப்புக்கேற்ற ஊதியம் கிடைக்கின்றது.

ஆனால் இந்நாட்டுக்காக 10 தலைமுறையாக உழைத்த மக்களுக்கு ஒரு துண்டு காணி கூட இன்னும் வழங்கப்படவில்லை.

மலையகப் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்குத் தற்போது வழங்கப்படுகின்ற நாளாந்தச் சம்பளம் போதுமானது அல்ல. தற்போதைய சூழ்நிலையில் நாளொன்றுக்கு 5 ஆயிரம் ரூபாய்கூடப் போதாது. நியாயமான மற்றும் நிரந்தரச் சம்பளம் வழங்கப்பட வேண்டும். அதற்காக இலங்கைத் தமிழரசுக் கட்சி தொடர்ந்தும் குரல் கொடுக்கும் எனக் கூறினார். (ந-7)

## தீர்வு கண்ட...

சபைகளை நியமிக்கும் பணிகள் நிறைவடைந்ததும், மாகாண சபைத் தேர்தலுக்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. மாகாண சபைத் தேர்தலை விரைவாக நடத்த வேண்டும் என்ற நிலைப்பாட்டில் நாம் உறுதியாகவுள்ளோம்.

நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் அப்போதைய மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் அமைச்சர் பைசர் முஸ்தபா சமர்ப்பித்த 2017ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க மாகாண சபைத் தேர்தல்கள் (திருத்தச்) சட்டமூலம் தோற்கடிக்கப்பட்டது.

இந்தச் சட்டமூலம் தோற்கடிக்கப்பட்டதைத் தொடர்ந்து மாகாண சபைத் தேர்தல் காலவரையறையின்றி பிற்போடப்பட்டது. மாகாண சபைத் தேர்தலை நடத்துவதாயின் எல்லை நிர்ணயப் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும்.

இவ்விடயத்தில் முரண்பாடற்ற வகையில் தீர்வு காண்பது அத்தியாவசியமானது. மாகாண சபைத் தேர்தல்களின் எல்லை நிர்ணயம் குறித்து அமைச்சுக்களின் ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் விரைவாகக் கலந்துரையாடப்படும்.

அதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளன. மாகாண சபைத் தேர்தல் குறித்து பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அரசியல் கட்சித் தலைவர்களுடன் வெகுவிரைவில் கலந்துரையாடலில் ஈடுபடுவோம்.

மாகாண சபைத் தேர்தல் குறித்து பாராளுமன்றத்தின் ஊடாக பொதுவானதொரு இணக்கப்பாடு எட்டப்பட வேண்டும் என்றார். (ந-7)

## வடக்கு...

மாகாணத்தின் கல்வி நிலையானது ஒன்பது மாகாணங்களுடன் ஒப்பிடுகையில் கீழ்நிலைக்குச் சென்றுள்ளமைக்கு என்ன காரணம்? இதற்குப் பொறுப்புக்கூறவேண்டியவர்கள் யார்? எனத் தொடுக்கப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது குறித்து மேலும் கருத்துரைத்த அவர்,

முதலில் பொறுப்புக்கூற வேண்டியவர்கள் பெற்றோர்களே. அவர்களது செயற்பாடுகளே பிள்ளைகள் தடம் மாறக் காரணமாக அமைகின்றது.

புலம்பெயர்ந்த உறவுகளினால் மிதமிஞ்சிய அளவுக்கு வெளிநாட்டுப் பணம் இங்கு அனுப்பப்படுகிறது. இந்தப் பணம் எங்களுடைய மாணவ சமுதாயத்தை நாசமாக்குகிறது.

யுத்த காலத்தில் அன்றாட வாழ்க்கையை நடத்த முடியாத நிலையில் கூட, வடக்கு மாகாணம் கல்வியில் தடம் புரளாது சாதனை புரிந்தது.

இப்போது மிதமிஞ்சிய வசதிகள் வீடுகளில் உள்ளன. எனவே வாழ்க்கைக்கான போராட்டம் அங்கில்லை. இவ்வாறான சூழல் மாணவர்களின் கல்வி மீதான நாட்டத்தைக் குறைக்கின்றது. கல்விக்கான தேவையை மாணவர்களும் பெற்றோர்களும் உணர மறுக்கின்றனர். இதுவே பின்னடைவுக்கு மூலகாரணமாகும்.

வடக்கில் சில பாடசாலைகள் மட்டுமே பரீட்சைப் பெறுபேறுகளில் பிரகாசிக்கின்றன. ஆனால் தீவக வலயம் உட்பட பல பிரதேசங்களில் பெற்றோர்கள் மற்றும் மாணவர்கள் கல்வி விழிப்புணர்வு அற்றவர்களாகவுள்ளனர். இப்பிரதேசங்கள் அடையாளப்படுத்தப்பட்டு முறையான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டால் மாத்திரமே வடக்கின் கல்விப் பெறுபேறு உயர்வடையும் என்றார். (ந-7)

## அன்று...

யின் விலை கடுமையாக அதிகரித்துள்ளதாக கடை உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

பெரிய வெற்றிலை 10 ரூபாய்க்கும் நடுத்தர வெற்றிலை 8 ரூபாய்க்கும் சிறிய வெற்றிலை 7 ரூபாய்க்கும் கிடைப்பதாகவும் வெற்றிலை மட்டுமல்லாது பாக்கின் விலையும் அதிகரித்துள்ளதாகவும் வியாபாரிகள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை கடந்த மாதங்களில் தேங்காய்க்கான தட்டுப்பாடு கடுமையாக இருந்தது தெரிந்ததே. (ந-7)

## செவ்வந்தியின்...

செயலுக்கு உடந்தையாக இருந்த குற்றச்சாட்டின் பேரில் அவர் கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ந-7)

## முல்லையில்...

ழுந்ததுடன் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

இரு மோட்டார் சைக்கிள்கள் ஒன்றுடன் ஒன்று மோதிக் கொண்டதிலேயே குறித்த விபத்து சம்பவித்துள்ளது.

இதில் வெள்ளப்பள்ளம் பகுதியைச் சேர்ந்த சசிகரன் (வயது-37) என்ற குடும்பஸ்தரே உயிரிழந்தவராவார். (ந-7)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

மஹஜன சம்பத
திகதி 2025.07.13
சீட்டிழுப்பு இலக்கம் 5889
J 1 1 8 8 2 1
அத சம்பத
J 8 8 2 1
சீட்டிழுப்பு இலக்கம் 0464
National Lotteries Board

சுப தவசக்
திகதி 2025.07.13
சீட்டிழுப்பு இலக்கம் 0085
கன்னி 04 18 43 46
www.nlb.lk

தன நிதானய
திகதி - 2025.07.13
சீட்டிழுப்பு இலக்கம் - 1919
I 34 37 53 59 I
Double Chance 73410

மெகா பவர்
திகதி 13/07/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2237
L 22 40 45 61 66

ஜய JAYA
திகதி 2025.07.13
சீட்டிழுப்பு இலக்கம் 0157
G 1 2 6 8
www.nlb.lk

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4131
சீட்டிழுப்பு திகதி 13.07.2025
X 15 23 24 31
X
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.07.13
சீட்டிழுப்பு இலக்கம் 1198
ரிஷபம் 10 20 34 42 ரிஷபம்
16767 48

உத்தியோகபூர்வ முடிவுகள்
சுபிரி தன சம்பத
13.07.2025 வெற்றி வாரம் 0597
Z 2 6 4 9 3 9
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.20,320,012.00
DLB DEVELOPMENT LOTTERIES BOARD
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2863
சீட்டிழுப்பு திகதி 2025.07.13 தினம் ஞாயிற்றுக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 03 21 23 44 L
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.50,000,000.00
DLB

சனிதா
திகதி 13.07.2025 வெற்றி வாரம் 5024
12 20 47 54 I
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 50,253,208.40
ரூ. 50,000/-
DLB
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சசிரி
சீட்டிழுப்பு வாரம் 725
சீட்டிழுப்பு திகதி 13.07.2025
ஞாயிற்றுக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 06 18 44
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.2,000,000.00
DLB

ராசி அதிர்ஷ்ட
சீட்டிழுப்பு வாரம் 4575
சீட்டிழுப்பு திகதி 13.07.2025 தினம் ஞாயிற்றுக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 16 31 33 34 துலாம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.5,574,798.00
DLB

லக்பதி
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
C 25 17 19 49 64
சுப்பர் இலக்கம்
2039
13.07.2025
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.582,248,789.40
DLB
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ADA KOTIPATHI
ஞாயிற்றுக்கிழமை
வெற்றி வாரம் : 2689
சீட்டிழுப்பு திகதி : 2025.07.13
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.71,592,227.20
03 23 34 38 X
DLB

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழர் ...

கொக்காவில் தாக்குதலின் 35 ஆவது நினைவேந்தல் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய தேரர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டைப் பிரிக்க வேண்டும் என்ற இந்தியாவின் நிலைப்பாடு ஒரு தசம புள்ளி கூட மாறவில்லை. இந்தியா இப் போது இலங்கைக்கு 300 பில்லியன் ரூபா கடன் நிவாரணம் வழங்கப் போகிறது.

இலங்கை இந்தியாவிற்குச் செலுத்த வேண்டிய 1.7 பில்லியன் டொலர்களை மீள அறவிடாமல், நமது பெரிய சகோதரர் கடன் நிவாரணம் வழங்கப் போகிறார்.

புலம்பெயர் மக்களைப் பயன்படுத்தியேனும் அப்பாவித் தமிழ் மக்களைப் பயன்படுத்தியேனும் தந்திரோபாயங்களைப் பயன்படுத்தியேனும் நமது நாட்டைப் பொருளாதார ரீதியாகவோ, பிராந்திய ரீதியாகவோ அல்லது அரசியல் ரீதியாகவோ நிலைகுலைத்து இறுதியில் வடக்குக் கிழக்கை இந்திய மாநிலமாக உருவாக்கும் திட்டமே இடம்பெறுகின்றது என்றார். (ந-7)

## அதிர்ஷ்டம் வெல்லப்பட்டுள்ளது

தேசிய லொத்தர் சபையின் யாழ்ப் பாண மாவட்ட விற்பனை முகவர் திருமதி வி.கௌசல்யாவினால் விற்பனை செய்யப்பட்ட ஹந்தஹன லொட்டரி சீட்டின் வாயிலாக நேற்றைய சீட்டிழுப்பின் போது ரூ.43 இலட்சத்து 43 ஆயிரத்து 220 வெல்லப்பட்டுள்ளது. (ந-7)


## மணப்பெண் தேவை

01. குப்பிழான். இந்து. 1990. கேட்டை. MPH, MHA and MBA phd, Reading Canada Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (46762)
02. இணுவில். இந்து. 1990. அனுசம். Quantity Surviour, Australia citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (34984)
03. காரைநகர். இந்து. 1992. சுவாதி. Bachelor of Health Science (Deakin University), Newzealand citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (49974)
04. இளவாலை. இந்து. 1994. மகம். BSc computer Engineering (UK), Uk citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (53872)
05. தெல்லிப்பளை. இந்து. 1988. உத்தரம். BSc civil Engineering (peradeniya), MSc (US), Doing phd, US citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
06. நெடுங்கேணி. இந்து. 1987. ரேவதி. Masters of Engineering, civil Engineering and Business, Medical of Science at Australia, Australia citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (32687)
07. மட்டுவில். இந்து. 1985. கேட்டை. BEng (Hons) computer Network Engineering (university of East London), UK citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை.(51409)
08. கொக்குவில். இந்து 1983. திருவோணம். MSc in Teasting Engineering, Uk PR மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (30712)
09. கொல்லங்கலட்டி. இந்து. 1991. MSc in Economics and Marketing (copennagen Business), Denmark citizen, Divorce மாப்பிள்ளைக்கு பெண் தேவை.(52531)
10. கரவெட்டி. இந்து. 1991. பூராடம். Electric and Electronic Engineering (UK), UK citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை.(35946)

எம்மிடம் எல்லா நாட்டிலும், எல்லா ஜாதியிலும் Unmarried, Divorce மாப்பிள்ளைகளும் மணப்பெண்களும் உண்டு. (1327)

S.Sharma J.P | 077 539 3728
www.thaalee.com

புதிய பிரிவுகள் ஆரம்பம்
19.07.2025

தொழிற்துறைக்கணக்காளர் ஆவதற்கு
aat (SriLanka)
(AA1, AA2, AA3)
Qualification:- G.C.E O/L 6 Passes (Medium - Tamil & English)

✧ A/L மாணவர்களின் நலன் கருதி வார நாட்களில் aat வகுப்புக்கள் நடாத்த தீர்மானித்துள்ளோம்.

கணக்காளர் கற்கை நெறிகள்
Chartered Accounting Courses
Business Level I,II
Qualification:- G.C.E A/L 3 Passes(Medium - Tamil & English)

Further Details:- Jaffna College Undergraduate Dept.
464, Hospital Road, Jaffna.
0212223382
0774405917
(C-3380)

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

ஆகாஸ் நகை மாடம்


யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-3408)
076 825 7716 (ஆகாஸ்)

DCM யாழ் நகர்
வேம்படி மகளிர் கல்லூரி அருகாமை
A/L 2027
கலை, வர்த்தகப் புதிய பிரிவு
ஆரம்பம் :
19.07.2025 காலை 8.00 மணி (சனி)
நிர்வாகம் : 077 778 9815
(C-3407)


## மரண அறிவித்தல்

### தவவிநாயகம் சந்திரகுமார்
### (Kumar Shop – நிறுவன உரிமையாளர்)



தோற்றம் 14.11.1954 | மறைவு 08.07.2025

யாழ்ப்பாணம் அல்லைப்பிட்டி 2ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் பிரான்சை தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்டிருந்த தொழிலதிபர் திரு. தவவிநாயகம் சந்திரகுமார் (குமார்ஸ் சொப், சிங்கப்பூர் எக்சேஞ்ச் உரிமையாளர்) அவர்கள் 08.07.2025 செவ்வாய்க் கிழமை அன்று பிரான்சில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் செல்லத்துரை உடையார் (அல்லைப்பிட்டி) சொர்ணம்மா தம்பதிகளின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான தவவிநாயகம் (கிராம தலைமைக்காரன், கிராம சபைத்தலைவர் அல்லைப்பிட்டி கிருஷ்ணாம்பாள் தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை சிவபாக்கியம் (அல்லைப்பிட்டி) தம்பதியரின் அன்பு மருமகனும் திருமதி. தயாநாயகி (பிரான்ஸ்) அவர்களின் அன்புக் கணவரும் கிருஷாந், சிவப்பிரகாஷ், வித்தியாபதி ஆகியோரின் பாசமிகு தந்தையும் ராயிசா, பத்மஸ்ரீ, அருள்மீரா ஆகியோரின் அன்பு மாமனாரும் கிருபாலினி (பிரான்ஸ்), சூரியகுமார் (சூர்யா ஜுவல்ஸ் - லண்டன்), தவபாலனி (பிரான்ஸ்), ஜெயபாலினி (லண்டன்), குணபாலினி (பிரான்ஸ்), காலஞ்சென்ற உருத்திரகுமார், சத்தியபாலினி (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற தொழிலதிபர் இந்திரஜித், பரமேஸ்வரி (லண்டன்), சிவநேசராஜா (பிரான்ஸ்), இரவீந்திரன் (ஆசிரியர் - லண்டன்), ஜெயசீலன் (பிரான்ஸ்), கஜவல்லி (லண்டன்), சிவானந்தன் (லண்டன்), தனலெட்சுமி (யாழ்ப்பாணம்), விஜயலெட்சுமி (அல்லைப்பிட்டி), கோபாலகிருஷ்ணன் (கொழும்பு), வசந்தமல்லிகா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் காலஞ்சென்றவர்களான விநாயகரட்ணம், இராஜரட்ணம், மாலினி (கொழும்பு), சிவநாதன் (பிரான்ஸ்) ஆகியோரின் சகலனும் றிஸ்னா, றித்திக், சச்சின், அனன்யா, ஹரிஸ், றிஸ்வா, காவியா, ரிஷி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் 09.07.2025 தொடக்கம் அவரது இல்லத்தில் (7 Av de la Reunion, 93600 Aulnay-sous-Bois) பார்வைக்காக வைக்கப்பட்டு இறுதிக் கிரியைகள் நாளை (15.07.2025) செவ்வாய்க்கிழமை அன்று காலை 6 மணி தொடக்கம் காவை 10 மணி வரை அன்னாரது இல்லத்தில் நடைபெற்று தகனத்திற்காக (Crématorium des Joncherolles 95 Rue Marcel Sembat, 93430 Villetaneuse) எடுத்துச் செல்லப்பட்டு நண்பகல் 12.00 மணியிலிருந்து அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பி.ப. 1.15 மணிக்கு தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

"குமார் ஹவுஸ்"
(தவகிருஸ்பவன்)
2ம் வட்டாரம்,
அல்லைப்பிட்டி. (4793)

த.சூரியகுமார் : +44 795 65 09035
ச.கிருஷாந்தன் : +33 620 85 6419
ச.சிவப்பிரகாஷ் : +44 794 6504 997
ச.வித்தியாபதி : +33 651 85 0460

தகவல் :
அல்லைப்பிட்டி
செல்லத்துரை
உடையார் குடும்பம்


கனடா - வரி இல்லாமல்
விரைவு பொதிகள் சேவை

5-9 Kg 3950/-
11-16 Kg 2690/-
21-27 Kg 2490/-

குறைந்த விலை -நிறைந்த சேவை
கருவாடு, மருந்து வகைகள், எண்ணெய் வகைகள் அனுப்பலாம்
14 நாட்களில் Delivery

UK 11Kg - 1400/- France 11Kg - 2200/- Germany 11Kg - 2000/-
Swiss 11Kg - 2470/- Australia 11Kg - 2130/- Italy 11Kg - 2250/-

எமது நேரடி கிளைகள்
கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம், சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை

V2 TRAVELS 076 822 6241 076 822 6237

தேவை
யாழ். நகரில் இயங்கும் அலுவலகம் ஒன்றிற்கு துப்பரவுப் பணியாளர் தேவை. (Cleaning Staff) (4792)
தொடர்புகளுக்கு
077 936 1427


## சிவன் அடி சேர்ந்தாள் சிவயோகம்

தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை.

### 1ம் ஆண்டு நினைவஞ்சலி

### அமரர் சற்குணதேவி சிவயோகம்

பிறப்பு 1959.04.26 | இறப்பு 2024.06.25

ஆனி மாதம் சங்கடஹர சதுர்த்தி தேய்பிறை 14.07.2025



கண்ணகியை வென்ற கற்புக்கு அரசி
மணாளனே மங்கையின் பாக்கியம்
கணவனே கண்கண்ட தெய்வம் என்ற
வள்ளுவரின் தத்துவ வரிகளுக்கு அமைய
வாழ்ந்து காட்டியவள்.
திருவள்ளுவர் சாப்பிட அமர்ந்ததும் அவருடைய
மனைவி சிறு தண்ணீரும் ஒரு ஊசியும் வைப்பார்.
சிதறுண்ட சோற்றை ஊசியில் குத்தி எடுத்து கழுவி
பிரயோசனப்படுத்துவார்.
சிவயோகம் பொழுது பட்டதும் முகம் சுத்தம்
செய்வதற்காக சிறிய வாழியில் தண்ணீர் வைப்பதை
மறக்கமாட்டாள். புதுவருடப் பிறப்பு அன்று என்னை
விழுந்து வணங்கி கைவிஷேடம் பெறுவார்.

குடும்பத்தினர் (4699)

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 14.07.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org